
REGD. M. 464

# திராவிட நாடு





## நிர்ணயம்

எலிசபெத் இளவரசி—வயது 21. பிரிட்டிஷ் ஆட்சிக்கு இவரே வாரிசு. ஆட்சிக்குவர இருக்கும் ஆரணங்கு, கன்னிக் கோலத்தைக் களைந்து விட்டு, காதல் வாழ்வு நடத்தத் தீர்மானித்து விட்டார். திருமண நிச்சயமாகி விட்டது. எலிசபெத் இளவரசியாரை வாழ்க்கைத் துணையாகக் கொள்ளும் வாய்ப்புப் பெற்ற வசீகர இளைஞர்—இதோ. கிரேக்கநாட்டரசரின் புதல்வர் லெப்டினென்ட் பிலிப்மவுண்ட்பேட்டன். இவருக்கும் இளவரசியாருக்கும் திருமணம் நடப்பதென்பது நிச்சயமாகி விட்டது. தேதி மட்டும் நிர்ணயிக்கப் படவில்லை.

15-ம் பக்கத் தொடர்ச்சி

வைகுந்தமும் கைலாயமும், இவரை வரவேற்க, ஒன்றோடொன்று போட்டியிடும் என்று நம்புகிறோம். பூதேவர்கள், ஆஹா! புதிதாக ஒரு ரட்சகர் கிளம்பினார் என்று கூறிப் பூரிப்படையக் கூடும்.

*மதத்தைக் கண்டிக்கக் கூடாதாம்! தடை உத்திரவாம்!*

மடாதிபதிகள் அல்ல-ஜீயர்களல்ல-வேதசாஸ்திரவிற்பன்னர்கள் அல்ல-சகஜானந்தர் சல்லடம் கட்டுகிறார். தவறாகக் கூறிவிட்டேன், சல்லடம் கட்டுகிறார் என்று—சல்லடம் கட்டினாலாவது, பூகமில்லாவிட்டாலும் ஆண்மை நிரம்ப இருக்கிறது என்று கருதலாமே—மதிப்பு மளிக்கலாமே! இவர் சல்லடம் கட்டவில்லை—சட்டசபையிலே சாடி சொல்லி, தடை உத்தரவு பிறப்பிக்கப் போகிறாராம். வீரப் பணியுமல்ல, விவேகியின் செயலுமாகாது — ஆனால் அவருடைய அலுவல் அதுவாம். அதிகாரம் கையிலே இருக்கும் போது, எதையும் செய்யலாம் என்பதன்றி, வேறென்ன கருத்து இருக்க முடியும் இந்தக் காரியத்துக்கு.

இப்போது நடைபெறும், எந்தப் பிரசாரத்தை, இவர், மதங்களைக் கண்டிக்கும் பிரசாரம் என்று பெயரிடுகிறார்? எந்தக் கருத்துடன், யார், இப்போது மதங்களைக் கண்டிக்கிறார்கள்.

பகிரங்கமாகவே நாம் பலவருஷ காலமாக, மதத்தின் பெயரால், குறிப்பாக இந்து மதத்தின் பேரால் நடைபெறும் காரியங்கள், நம்பப்படும் கொள்கைகள், இவைகளைக் கண்டித்து வருகிறோம் — பகுத்தறிவின் சார்பிலே நின்று பேசி வருகிறோம். பயனற்றதும், கேடு பயப்பதும், அறிவுக்குப்புறம்பானதும், நம்மவரது ஆண்மையை அழிப்பதும், நேரத்தையும் புத்தியையும் பாழாக்குவதுமான, மூடத்தனங்கள், மதத்தின் அனுமதி பெற்று இருக்கும் கோர நிலைமையைக் கண்டித்துப் பேசுகிறோம், இதற்காக, நமது 'நாக்கை' அறுத்துவிட வேண்டும் என்கிறார் சகஜானந்தர்!! நாக்கை அறுத்து விடு என்று கூறுவதற்கு ஒப்பானதுதானே, தடை போடச் சட்டப் பிறப்பிப்பது.

ஒன்று கூறுகிறோம் அவருக்கு. தீர்மானம், நிலைக்குச் சட்டமாகலாம்—தடுப்பார் இல்லை—ஆனால், பொது இடங்களிலே மதங்களைக் கண்டித்துப் பேசக் கூடாது, என்று கூறும் இவர், எது மதக்கண்டனப் பேச்சு என்பதை நிர்ணயிக்க முடியுமா?

ஓய் சகஜானந்தரே! உமது இனத்தவரை—திராவிடப் பழங்குடி மக்களை—மதத்தின் பெயர் கூறித்தான் இதுநாள் வரை, கோயிலிலே நுழையக் கூடாது என்று தடுத்துவந்தனர். ஆதித்திராவிடரை, ஏன் ஆலயத்துக்குள் விடக் கூடாது? அவர்கள் வந்தால், சாமியா தீட்டுப்பட்டுவிடும்? என்று முதன் முதலில் கேட்க ஆரம்பித்தவர்கள், அவ்விதமான அநாகரிக வழக்கத்தைக் கண்டித்தவர்கள், அந்த வழக்கத்தை வேத சம்மதமுள்ளது என்று வாதிட்ட வைதீகர்களின் மதப் பித்தத்தைச் சாடியது, யாரோ, அவர்களின் நாவைத்தானே துண்டிக்கச் சொல்கிறீர்! தாராளமாகச் செய்யச் சொல்லுங்கள்—விரைவிலே—ஏனெனில், மதத்தின் பெயர் கூறிக்கொண்டு பிழைக்கும் பேர்வழிகளின் ஊழல்கள் விரைவிலே அம்பலமாகிவிடும் — ஆகவே, நாக்கறுக்கும் நற்பணியைத் துவக்கும். ஆனால் மற்றொன்று தெரிந்து கொள்ளும். இந்தத் திட்டம், வெற்றி தாராது. நாடும் சமுதாயமும் திருத்தியாக வேண்டும், என்ற நோக்கமுடைய எவரும், தடைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள்—சிறையை நிரப்பவும் பின்வாங்க மாட்டார்கள். தடை உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம், உமக்கு இருக்கிறதென்பது உண்மை, ஆனால் தாங்கள் நம்பும் காரியத்தைச் செய்வதற்காகத் தங்களைத் தாங்களே அர்ப்பணம் செய்து விடவும், தியாகத் தீயிலே குளிக்கவும், இந்நாட்டிலே, ஆயிரமாயிரம் வீரர்கள் உளர். அதை அறிந்து கொள்ளும்.

தடை உத்தரவாம்! வெட்கம் இருக்க வேண்டாமா இவர்களுக்கு. யாரோ சில "அஞ்ஞானிகள், அவிவேகிகள்" மதத்தைக் கண்டிக்கட்டும் இவர்களின் பேச்சை எவர் மதிப்பர், எவர் நம்புவர், அனாதிகாலத்ததும், அருளுடையவர்களின் உபதேசங்களை அரணாகக் கொண்டதுமான மதத்தை, இந்த மதியிலிகள், தமது உரையால், அசைக்கவும் முடியுமோ, இதுகளின் பேச்சை நாட்டார் ஏற்கார்-பேசட்டும்-என்றல்லவா, வீரர் கூறவேண்டும். வீரத்திலே, மேலும் கொஞ்சம் உயர்ந்தரகமாக இருக்க வேண்டுமானால், காகமானது ஓர் ஆயிரம் கூடினாலும் ஓர் கல்லின் முன் எதிர்த்து நிற்குமோ என்ற முறைப்படி, இதுகள் கத்தினாலும், கண்டித்தாலும், ஒரே ஒரு பாசுரத்தைக் கூறினால் போதாதா மெய்ஞானத்தை நிலை நாட்ட, என்றல்லவா, மார்தட்டிக் கூறவேண்டும். அஞ்ஞானிகள்! சப்சபவாதிகள்! பாபப்ரகிருதிகள்!-எதுகளாயினும் பேசட்டும், அவ்வளவுக்கும் அடியேன் அரி அரதாசன் அரை விநாடியிலே பதிலுரைத்திடுவேன், மக்கள் மனதிலே மதத்தின் மேன்மையைப் புகுத்திடுவேன், என்று வீரமொழி பேசுவதை விட்டீர், சட்டத்தைப் பிடித்திழுத்து வந்து, மிரட்டுகிறீரே,

(6-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

"ஆமா! அதேதான். ஆனா, சிவராமா! இந்த மனக்கொதிப்பு, ஏதேனும் தொல்லையா வந்து முடியுமோ? என்னா, கொதிப்படைந்திருப்பவா, ஜஸ்டிஸ்காரா அல்ல, காங்கிரசிலே உள்ள திராவிடாளன்னோ". என்று ஸ்ரீஜத் சஞ்சலம் கேட்கிறார். "கவலையே வேண்டாம். கொஞ்சம் புதிய உபதேசம் தேவை. செய்தால், 'இதுகள்' தானாக அடங்கி விடும்', என்கிறார் சிவராம்.

"நம்ம சிவராம் சொன்னால், சரியாக இருக்கும்டா! இல்லாமலா, கோயங்கா, சிவராமை அமெரிக்கா அனுப்பிவைத்தார்" என்று ஸ்ரீஜத் சஞ்சலமே கூறிவிடுகிறார்.

பிறகு, ஆரம்பமாகும் சத்கதா காலட்சேபந்தான், சிவராமனின் தெளிஉரை — தேசபக்திக்குப் புதிய பொருள். திறமை உள்ளவர்களை உபயோகிக்க வேண்டியதன் அவசியம், இத்யாதி, இத்யாதி.

ரத்னச் சுருக்கமாகக் கூற வேண்டுமானால், கோபாலசாமி முதலான ஆரிய உத்தமர்களை, காங்கிரசல்லாதவர் என்ற காரணத்துக்காக, நிந்திக்கப்படாது, கேள்வி கேட்கப்படாது, மதிப்புக் குறைவாப் பேசப்படாது, அவா, மேதாவிகள், சகல சாஸ்திர விற்பன்னா, அவாளுடைய சேவை நாட்டுக்குத் தேவை—அவா சாமான்யாளல்ல—ஆரிய சிரேஷ்டாளன்னோ! —" என்பது தினமணி சிவாராம ஐய்யரவாளுடைய அபிப்பிராயம். இதற்குத்தான் இதோப தேசம். அமெரிக்கா அல்ல ஆசான், அந்த பரம்பரைப் பண்பு!! —

இலங்கை 15 சதம் மலர் 6 இதழ் 10 மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

# அரசியல் அகராதி

—●—

சிவராமன் புதிய வெளியீடு

தேசபக்தர்கள் என்ருல் காங்கிரசார்தான். காங்கிரஸ்காரர்கள் மட்டுமே தேசபக்தர்களாக இருக்க முடியும் காங்கிரசில் சேராதவர்கள் யாவரும் தேசத் துரோகிகள்.

இவ்விதம், ஒரு அகராதி இருக்கிறதல்லவா — ஆர்வத்திஞல் அவசரத்திலே தயாரிக்கப்பட்ட அகராதி! —இது சரியில்லை—எப்படியோ, மக்கள் இந்த முறையிலே எண்ணவும் பேசவும் பழகிவிட்டனர்.

தேச விடுதலைப் போரைக் காங்கிரஸ் ஸ்தாபனம் நடத்திவந்ததால், அதைச் சேர்ந்தவர்கள் யாவரும் தேச பக்தர்கள், மற்றவர்கள் யாவரும், தேசத் துரோகிகள் என்று மக்கள் எண்ணினர். இனியும் மக்கள் அவ்விதம் எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது—அது தவறு. காங்கிரசின் கோட்பாடுகளிலே சிலவற்றை அனுசரிக்க முடியாமலும், நியாயமாகவே கருத்து வேறுபாடு கொண்டும் சிலர், அந்த ஸ்தாபனத்தில் சேரவில்லை. ஆனுல், அதற்காக அவர்களைத் தேசத்துரோகிகள் என்று கூறிட முடியாது—கூறக்கூடாது—அப்படிக் கூறியே பழக்கப்பட்டிருந்தாலும்கூட, இனியாவது அதனை விட்டுவிட வேண்டும்.

நாட்டு விடுதலை கிடைத்துவிட்டது—ஆகவே இனித், தேசபக்தி என்பதற்குப்புதிய பொருள், கோட்பாடு, ஏற்பட்டாக வேண்டும்.

நாட்டுச் சேவை நோக்குடன் உள்ள நிர்வாக அலுவல்கள், ஏதோ ஓர் குறிப்பிட்ட அரசியல் கட்சியினருக்கு மட்டுமே உரிமை உள்ளவை என்று குறுகிய நோக்கம் கொள்ளக் கூடாது. திறமைசாலிகள் யாராக இருப்பினும், எங்கு இருப்பினும், எந்தக் கட்சியேயாயினும், அவர்களின் சேவையை நாட்டுக்குப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

எங்கே, எப்போது, சர். A. இராமசாமி முதலியார் இதுபோலப் பேசினுர்? என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு. ஆனுல், ஆச்சரியத்தைக் கேளுங்கள், மேலே வெளியிட்டிருப்பது, அவருடைய பேச்சல்ல—சி. ஆர். ரெட்டியார் உரையுமல்ல—பாரிஸ்டர் இரத்னசாமி பேச்சல்ல—லிபரல், ஜஸ்டிஸ், முதலிய கட்சியினரின் பேச்சுமல்ல.

அப்படியா! அவர்கள்தானே, இதுபோலப் பேசுவர்—நிர்வாக காரியத்துக்குத் திறமை வேண்டும்—தேசபக்தி என்பது ஒருகட்சிக்காரருக்கு மட்டுமே ஏகபோக உரிமையல்ல, தேசபக்தி என்ருல் ஒரு குறிப்பிட்ட கட்சியிலே உள்ளவர்களுக்கு மட்டுந்தான் ஏற்படும் உன்னத எண்ணம் என்று நினைப்பது தவறு,—என்றெல்லாம் அவர்கள்தானே பேசுவர். அதைப்போன்ற பேச்சாகத்தானே இருக்கிறது நீ மேலே குறித்திருப்பது. யார் அவர், இவ்விதத் தெளிவுரையை, குடிஅரசுக் கோட்பாட்டைக் கூறியவர் என்று கேட்பீர்கள், ஆவலுடன்.

'தினமணி' ஆசிரியர் ஸ்ரீசிவராமனின் பேச்சு இது—ஆமய்யா ஆம்! ஜூலை 27ந் தேதி சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையிலே, பேசியிருக்கிருர் இதுபோல.

"அமெரிக்கா போய்வந்தது வீணுகவில்லை, சார்! பாருங்கள், வழக்கமாகக் காங்கிரஸ்காரர்கள் பேசுகிற முறைப்படி இல்லாமல், தேசபக்தி, காங்கிரசல்லாதாருக்கும் உண்டு, அவர்களிலே திறமைசாலிகள் பலர் உளர்—அவர்களை மக்கள் தூஷிக்கக்கூடாது என்றெல்லாம் அறிவுரை புகன்றிருக்கார்—இது அமெரிக்க நாட்டு வாசத்தால் அவருக்கு உண்டான ஜனநாயக உணர்ச்சிதான்" என்று கூறவும், பாராட்டவும் தோன்றும். எனக்குந்தான் அவ்விதமான எண்ணம். ஒருவிதத்தில், ஓரளவுக்கு, அமெரிக்கப் பயணம், இந்த அறிவுரைக்குக் காரணந்தான். புதிய அகராதி—அல்லது அகராதியிலே உள்ள தேச பக்தி என்ற பதத்துக்குப் புதிய பொருள், எழுதும் அளவு, முன்னேற்றம் ஏற்பட்டது, வரவேற்கக் கூடியதுதான். பண்பு மலருகிறது என்று எண்ணியும் மகிழலாம். ஆனுல்....?

"ஆனுல்....ஏன் சார்? ஏன் இழுக்கிறீர்கள்?" என்று கேட்பீர்கள்.

சிவராமனுரின் புதிய பதிப்பு அகராதி, இந்தச் சமயம் வெளிவர வேண்டிய அவசியம் என்ன, என்பதைக் கொஞ்சம் சிந்திக்கும்போது தான், அமெரிக்கா அல்ல, சமயம், சந்தர்ப்பம், அவரை அவ்விதம் பேச வைக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

நிர்வாகத் திறமை—சட்ட அறிவு—சர்வதேசத் தொடர்பு—ராஜதந்திரம்—அரசியல் நுணுக்கம்—தொழில் திறம் — இன்னேரன்ன கொண்டவர்கள் காங்கிரசுக்கு வெளியே உள்ளனர், ஏராளமானவர்கள். அவர்கள் எல்லாம் திராவிடர் கழகமுமல்ல! ஆழ்வாராதிகளைக் கவனப்படுத்தும் அரிய திருநாமதாரி சர். இராமசாமி, கலை ஆர்வத்தில், டி. கே. சி. யுடன் போட்டியிடும் அளவு, புது இடம் பிடித்துக் கொண்ட சர். சண்முகனுர், கத்தோலிக்க மார்க்கத்தின் காவலர் போன்ற இரத்னசாமி, தொழில்நிபுணத்துவத்திலே டாட்டாக்களை ஒத்த ஜி. டி. நாயுடு, இன்னேரன்னவர்கள் உள்ள

ணர்—காங்கிரசல்லாதார்.

சிவராமனின் புதிய-ஆனால் சிரிய-யோசனையின்படி, இவர்களைக் காங்கிரசில் இல்லை என்ற காரணத்துக்காகத், தேசபக்தி அற்றவர்கள் என்று கூறவோ, அவர்களுடைய சேவையைப் புறககணிக்கவோ கூடாது. ஆனால், நடந்தது என்ன? நடைபெற்றுக் கொண்டிருப்பது என்ன? இனியும் நடைபெறப் போவது என்ன? இந்த நிபுணர்கள், நிந்தனைக்கு ஆளாகாமல், நாட்டின் நிலையை உயர்த்தும் நற்பணி புரியும் இடமும் வாய்ப்பும் அளிக்கப் பெறுவரா? சிவராமனின் வெளியீடான புதிய அகராதி முறைப்படி, இது நடைபெற வேண்டும்—ஆனால், காரியத்திலே இது நடைபெறாது!! ஏன்? இங்குதான் சூட்சமம் இருக்கிறது. நண்பர் சிவராமனின், உரை, இனி, இவ்விதமான 'தலைவர்களை' நாட்டுப் பணிக்கு அமர்த்தவேண்டும், அவர்களைத் தேசத் துரோகிகள் என்று தூற்றக்கூடாது, என்று புதிய திட்டம் வகுத்திடும் பேச்சல்ல—எதிர்காலத்துக்குத் திட்டமல்ல—நிகழ்கால நடவடிக்கை ஒன்றுக்கு, நண்பர் சிவராமனின் ஆதரவு தரும் வாதம் இது.

தேசபக்திக்கு உறைவிடம், காங்கிரசே என்று பேசப்பட்டு, அதிலே சேராதவர்கள் ஏசப்பட்டுவந்த நாட்களிலே, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் தூண்களாக, அடக்குமுறையை அகமகிழ்வுடன் பிரயோகிப்பதில், ஜெனரல் டயரின் சீடர்களாக இருந்த,பல பார்ப்பனத் தலைவர்கள், இப்போது தேசபக்தர்களின் இரத்தத்தால் மெழுகப்பட்ட ஆட்சிமுறை அமைப்புகளிலே, நிபுணர் மன்றத்திலே, நிர்வாக நிலையங்களிலே, ஜாம் ஜாமென' வீற்றிருக்கிறார்கள்—விடுதலைச் சாசனம் தயாரிக்கிறார்கள், அரசு அமைக்கும் அரும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசியல் நிர்ணய சபையிலே, சர். கோபாலசாமி ஐயங்காரும், சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், மற்றும் சில பார்ப்பனத்தலைவர்களும்,வீற்றிருக்கிறார்கள். —நமது நண்பர்கள் காக்கன், முனுசாமி, அழகேசன்போல, "கண்டுபிடிப்பவருக்கு ஆயிரம் ரூபாய் இனாம்!" என்று விளம்பரம் வெளியிடவேண்டிய நிலையிலா?" அல்ல! அல்ல!!—அகில இந்தியாவும், ஆச்சரியப்படும்படியான அந்தஸ்துப் பெற்று — கமிட்டிகளிலே, பொது மன்றத்திலே, எதிலும், எப்போதும் எக்களிப்புடன்!

இவர்கள் காங்கிரசல்லவே! கஷ்டநஷ்டம் பட்டறியார்களே, சட்டத்தினூடே என்னென்ன சந்துபொந்துகள் உண்டு என்று தேடிப்பார்க்கும் குணாளர்களாயிற்றே, உப்புக் காய்ச்சியபோது இவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் உலைக்கூடத்திலே அடக்குமுறைக்கான கருவியைத் தமது திறமை எனும் தழலில்போட்டுக்காய்ச்சி அடித்துக் கூராக்கினவர்களாயிற்றே, பூர்ண சுயராஜ்யமா? நாசென்ஸ்! நடக்குமா! அகிம்சையா? செச்சே! பைத்யக்காரத்தனமல்லவா? ஆர்டினென்ஸ்சா? ஆமாம், அதற்கு அதிகாரம் உண்டு சட்டப்படி, என்று இம்மொழிகள் பேசிவந்தவர்களாயிற்றே, இவர்கள், காங்கிரசல்லாதார்மட்டுமல்ல, ஏகாதிபத்ய தாசர்கள், பட்டம் பதவிகளில் புரண்டவர்கள், சொத்து சுகம் என்பதையே குறியாகக்கொண்டவர்கள், இப்படிப்பட்ட காங்கிரஸ் வைரிகள், தேசத்துரோகிகள், இடுப்பொடிந்தவன், இருமலால் நொந்தவன், கரமிழந்தவன், கண் இழந்தவன், கஷ்டநஷ்டப்பட்டவன், ஆகிய பல்வேறு வகையான கஷ்டம் அனுபவித்த காங்கிரஸ்காரர்கள் இருக்க, அவர்களை எல்லாம் தாண்டிக்கொண்டு, மேலான இடத்தில், உயர்ந்த பீடத்தில், நாட்டின் எதிர்காலத் திட்டத்தை உருவாக்கும் பணியிலே, முக்கிய புருஷர்களாவதா? இது தர்மமா, நியாயமா? இதையும் நாங்கள் கண்டு சகிக்கத்தான் வேண்டுமா?" என்று இப்போது சிலகாலமாக, சோகமும் சீற்றமும் கலந்தகுரலில், மனவேதனையுடன், காங்கிரசிலே உள்ள திராவிடத் தோழர்கள், குமுறிக் குமுறிக் கேட்கின்றனர். தியாகத்தீயிலே விழ நாங்கள், வெளிச்சம் போட்டுத்திரிய அவர்களா? ஆகுமா இந்த அக்ரமம்? காங்கிரசார்நாங்கள் இருக்க, கபடத்தாலோ, கருத்தற்ற தன்மையாலோ, ஏகாதிபத்யத்துக் குத்தாசர்களாய், தேகத்துரோகிகளாய் இருந்து வந்தவர்கள்,எப்படி, இந்தஇடத்தில் அமரலாம்? என்றுஆத்திரமும் அழுகுரலும் கலந்தபடி கேட்கலாயினர். கொஞ்சம், கலக்கம் ஏற்பட்டது. உண்மைதானே! கேட்பதிலே அர்த்தமிருக்கிறதே—நியாயமுந்தானே? எப்படி அவர்கள் மேலிடத்தில் அமர்ந்தனர்—என்று சிந்தனையில் குழம்பிற்று—செந்தேன் கொட்டுவது போலிருந்தது, பதைபதைத்த காங்கிரஸ் திராவிடர்களின் கேள்விகள். பாபம்! அவர்களின் மனம் பதறாமல் இருக்க முடியாதல்லவா? காங்கிரசில் இல்லை, வேறு கட்சி நடத்துகிறார், சர்க்காரில் வேலை பார்க்கிறார், என்றகாரணத்துக்காக, அவர்கள் இராமசாமிகளை, சண்முகங்களை, எவ்வளவு கடுமையாகக் கண்டித்துள்ளனர் — பழி சுமத்தியுள்ளனர்—எத்தனை முறை முழக்கமிட்டிருப்பர், தேசத்துரோகிகள் — நாட்டைக் காட்டிக் கொடுப்பவர் ஒழிக, ஒழிக, என்று. அவ்விதமாகப் பேசிய போது, அதே குற்றத்தை, இன்னும் கொஞ்சம் அதிகமாக, மேலும் கொஞ்சம் யச்சையாக, அவர்களை விடச்சற்றுத் தைரியமாகச் செய்து வந்த, சர். கோபாலசாமிகள், அல்லாடிகள் ஆகியோரையும் கண்டனர்-கண்டனத்துக்குரிய கும்பலிலே இவர்களும் சேர்ந்தவர்களே, என்று கூறினர். ஆனால் இன்று, அல்லாடிகள், கோபாலசாமிகள், காங்கிரஸ் தலைவர்களுக்கு வழி காட்டுவோராக, அவர்களின் புகழ்ச்சிக்கும் பூஜைக்கும் உரியவர்களாக உள்ளனர் — இதையும் காண்கின்றனர்—கண்ணெனும் புண் கொண்டு. சீற்றமும் சோகமும் பீறிட்டு வாராதா?

"வரட்டுமே சார், தாராளமாக வரட்டும். கேள்வி கேட்கட்டும். கவலை வேண்டாம். இதோ நான் இருக்கிறேன்"—என்று ஒரு குரல் கிளம்புகிறது, கலக்கமடைந்த முகாமிலிருந்து. "ஓஹோ! நம்ம சிவராம்! வாப்பா! சௌக்யந்தானே. ஆத்திலே..........." —உபய குசலோபரி நடக்கிறது.

"காங்கிரசல்லாதவா, எப்படி உன்னதமான பதவிகளிலேஇருக்கிறா என்பதைத்தானே "இதுகள்" கேட்கின்றன. சேட்கும் நாம், முன்பெல்லாம் சொல்லிண்டிருந்தோமே, காங்கிரசிலே இல்லாதவா, யாராக இருந்தாலும் சரி, மேதாவியாகக் கூட இருக்கட்டும், எங்களுக்கு அவா, அனுவசியம்-அவாளெல்லாம் தேசத் துரோகிகள் தான் — என்று பேசினோமே, அதனால், ஏறின ஆவேசம் 'இதுகளை' ஆட்டிவைக்கிறது. அதனாலே தான், நம்ம சர். அல்லாடி, அவாளுடைய இன்றய நிலையைக் கண்டு 'இதுகளுக்கு', ரோஷமும் கோபமும், குத்திண்டு வர்ரது" என்கிறார் சிவராமர்.

(2ம் பக்கம் பார்க்க)

சரித்திரச்சித்திரம்

# விடுதலை வீரன் ரிசால்

(கே. ஜி. இராதாமணாளன்.)

"இந்த வெள்ளையர்யார் அம்மா?"

"ஸ்பெய்னென்னும் தேசத்திலிருந்து இங்கு வந்தவர்கள்!"

"நம் நாடுதானே அம்மா பிலிப்பைன்? நாமேன் அன்னியருக்குப் பதுங்கிப் பயந்து வாழவேண்டும்?"

"நம் நாட்டைப்போரிலேவென்று நம்மை அடிமைப்படுத்தினார்கள். அடிமைகள் நாம், ஆகவே அவர்களுக்கு அஞ்சி அடங்கி நடக்கிறோம்!";

"இந்தநிலைமை மாறாதா அம்மா?"

"நீ வல்லவனானால், வளமான இந்நாடு திரும்பவும் நம் நாடாகும் கண்ணே!"

"நான் வீரனாவேன்! நாமிருக்கும் நாட்டை நமதாக்குவேன்!"

சிறுவன் ஜோசி ரிசாலுக்கும், அவன தாய்க்கும் நடந்தபேச்சு இது. 1861-ம் ஆண்டு ஜூன்மாதம் 19-ம் தேதி ரிசால் ஒருவீர குடும்பத்திற் பிறந்தான். அவன் தந்தை ஒருபுகழ் பெற்ற அறிஞர். தாய் ஒரு சிறந்த கவி. ஐந்து வயதிலேயே அழகாகப் பேசினான். தன்தாய் எழுதித்தந்த தேசியப்பாடல்களை உணர்ச்சியோடும் வீரத்தோடும் பாடினான்.

அவன் தாயார் பல தியாகிகளது வாழ்க்கை வரலாறுகளை எல்லாம் உருக்கமாகக் கூறுவாள். அவற்றை எல்லாம் கேட்ட அவன், நாட்டின் உயர்வுக்காக நானும் உயிர்விடுவேன் என்று தைரியமாகக் கூறுவான்.

ஸ்பானிய அதிகாரிகளுடைய அட்டூழியங்களைக் கண்டு அவன் உள்ளம் பதை பதைத்தது. தன்னாட்டின் பொன்னும் பொருளும் வெளிநாட்டிற்குச் சென்றுகொண்டிருந்ததைக் கண்டு வேதனைப்பட்டான். ஆண்மை இல்லையா நமக்கு? அன்னியர் தம் தாள் பணிகின்றோமே என்று எண்ணுவான். ஆத்திரமும் சோகமும் பிறக்கும்! உழைக்கிறார்களே என் இனத்தார், உழைத்தும் உண்ண உணவில்லா ல், உறங்க இடமில்லாமல் வறுமையில் சிக்கி வதைகிறார்களே என்று கோபத்தோடுதனக்குத்தானே பேசிக்கொள்வான்.

வீரஉள்ளம் படைத்த ரிசால்அன்னியரது அடிபணிய மறுத்தான், சில நேரங்களிலே அதற்காகச் சவுக்கடியும் பட்டிருக்கிறான். தன்வீட்டின் ஜன்னல் வழியாகச் சாலையிலே நடக்கும் கொடுமைகளை எல்லாம் தினந்தோறும் பார்த்து வந்தான். ஆத்திரமென்னும் அனல் கொழுந்துவிட்டெரிந்தது அவன் உள்ளத்தில்.

ரிசால் பதினோராம் வயதை அடைந்தான். தன் தாயாரைப் போலவே கவிதைபுனையக் கற்றுக்கொண்டான். வீரமிக்க பாடல்களை எழுதித் தன் தோழர்களிடம் படித்துக்காண்பிப்பான். இசையோடும் உணர்ச்சியோடும் பாடியும் காட்டுவான்.

* * *

ஸ்பானியர் ஆட்சியைக்கவிழ்க்கச் சூழ்ச்சி செய்வதாகக் குற்றம் சாட்டி ரிசாலினது தந்தையை அதிகாரிகள் தண்டித்தார்கள். புரட்சிகரமான பாடல்களை இயற்றுவதாகக் குற்றம் சுமத்தி அவனது அன்னையை அடைத்தார்கள் சிறையில். அவனது உள்ளம் வேதனையால துடி துடித்தது!

வேதனையைத் தணித்துக்கொள்ள வெளியே புறப்பட்டான் உலாவ. மணிலா நகரின் நடுவே ஒரு தூக்கு மேடை இருந்தது. ஸ்பானியர், தங்கள் ஆட்சியில் என்றென்றும் குடிகளுக்குப் பயமிருக்க வேண்டுமென்பதற்காகத்தினந்தினம் ஒருவர் அல்லது இருவரையாகிலும் தூக்கி விடுவார்கள், அல்லது அந்தத்தூக்கு மேடையின்மேல் நிற்க வைத்துச் சுட்டுக்கொல்வார்கள்.

தூக்குமேடையினருகே பெருத்த கூட்டமிருந்ததைக் கண்டான் ரிசால். தூக்குமேடையின்மேலே ஒரு கிழவர் கெம்பீரமாக நின்றுகொண்டிருந்தார். அக்கிழவரைக் கண்டதும் ரிசால் திடுக்கிட்டான்! ஆம்! அவர் தான் முன்னொரு நாள் அவனுக்கு ஆசி கூறிய பெரியார். அக்கிழவர் தன்னாட்டவர்களுக்குக் கடைசி முறையாக வணக்கம் தெரிவித்தார். அவர் முகம் கறுப்புத்துணியால் மூடப்பட்டது. அவர் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது. பிணம் தூக்குமரத்தில் தொங்கியது!

"ஐயோ!" என்று அலறினான் ரிசால். பட்டப்பகலில் இவ்வளவு வெட்ட வெளிச்சமாக அநியாயம் நடைபெறுகிறதே என்று கதறினான்! ஓடோடியும் வந்து, தன்வீட்டில் விழுந்துவிட்டான். அவனது ஆத்திரம் துக்கம் எல்லாம் கரைந்து கண்ணீராக வெளியே வந்தன! தூக்குமேடை, அதன்மேலே தன்னை நீடூழி வாழகவென்று வாழ்த்திய பெரியார்! தூக்குமரம், அதிலே தொங்கிய அக்கிழவரது பிணம்! ஆகிய அந்தத் தூக்குக்காட்சி அவனது மனக்கண்ணைவிட்டு நீங்கவே இல்லை!

"தூக்குமேடை! நினைக்கவே என் நெஞ்சம் அஞ்சுகிறதே! எவ்வளவு பயங்கரமான மேடை! நம் இனத்தவனான தச்சன் செய்த மரவேலை தானே அது! இல்லை! அது மரவேலை அல்ல! அன்னியரது ஆணவமும், கொடுமையும்தான் அந்த வடிவமாக நிற்கிறது!" தனக்குத்தானே ஆத்திரமாகப் பேசிக்கொண்டான்.

நாட்டில் நடைபெற்று வரும் இந்தக்கொடுங்கோலை வீழ்த்துவது எப்படி என்று தீர யோசித்தான். "இன்றே நான்மட்டும் எதிர்த்தால், என் உயிர் பலியாகும். உயிரைப்பற்றிக்கவலையில்லை. உயிர்விட்டால் ஏதாவது பயன் ஏற்படுமா என்றால் ஒன்றும் தற்போதைய நிலைமையில் நிச்சயமாகச் சொல்லமுடியாது. வெள்ளைக்காரரே அதிசயக்குமளவுபுலமை பெறவேண்டும். பெற்ற அறிவால் பிறந்தநாட்டின் மேன்மையை, மேதினி முழுவதும் பரப்பவேண்டும். உலகின் நன்மதிப்பை முதலில் நாம் பெறவேண்டும். அதன் பிறகு, புரட்சியைத்துவக்கினால் நிச்சயம் வெற்றி அடைவோம்!" இப்படி நாட்டுவிடுதலைக்கான பற்பல திட்டங்களைத்தன் இதயத்தின் சுவர்களிலே தீட்டிக் கொண்டான். திட்டத்தின்படியேலே

(10-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தப் போக்கிலே உள்ள எதேச்சாதிகாரத் தன்மைகூட ஒருபுறம் இருக்கட்டும், இதிலே தொக்கியுள்ள பயங்காளித்தனம், எவ்வளவு என்பதை எண்ணிப் பார்த்தீரா? தடை உத்தரவு! தர்க்கம் செய்ய—தெளிவுரை கூற—மக்களிடை உண்மை மத உணர்ச்சியை ஊட்ட முடியும் என்று நம்பிக்கை கொள்ள—இது வெல்லாம் முடியவில்லை — நாக்கு அறுத்தாலொழிய நமது மதத்தின் மதிப்பைக் காப்பாற்ற முடியாது என்ற மனப்போக்குக்கொண்டு விட்டீர். ஏனய்யா உமக்கு இவ்வளவு அவநம்பிக்கை! தேசியக்கவி பாரதியாரின் பாடல்களை, பள்ளிகூடங்களிலே பாடக்கூடாது என்று அன்னிய ஆட்சி தடை விதித்தபோது, என்ன சொன்னதாக ஞாபகம்? பழைய காங்கிரஸ்காரர் யாரையாவது கேட்டுப்பாரும்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பாரதி பாடலுக்கு மிரளுகிறது! என்று கேலி செய்தோம்.

இன்று? சர்வ வசதிபெற்ற காங்கிரசுக்கு, சீர்திருத்த இயக்கக்காரர்களின் பேச்சு என்றால் அவ்வளவு கிலி உண்டாகிறது!

நாலுவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநாலு கலைஞானம்இருக்க, பராசரர், யாக்ஞவல்கியர்களின்உபதேசங்கள் இருக்க, உபநிஷத்இருக்க, கீதை இருக்க, பாசுரங்கள் வண்டி வண்டியாக இருக்க, ஒருவாசகத்துக்கும் உருகாதாரையும் உருகவைக்கும் திருவாசகம் இருக்க, முருகன் அருளைத்தரும் திருப்புகழ் இருக்க, காவடிச்சிந்து இருக்க, இவைகளைப்பரப்ப மடங்களும், பஜனைக்கூடங்களும், பிரசங்கமேடைகளும் இருக்க, இவற்றிலே அமர்ந்திருந்து, உபதேசிக்க, பேச, சங்கராச்சாரி முதற்கொண்டு சகஜானந்தனார்வரை, படை இருக்க, இவ்வளவிலும் நம்பிக்கை வைக்காமல், இவைகளைக்கொண்டு, மதத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையும்ஆசையும் பிறக்கச்செய்து, மதத்தைக்கண்டிப்பவர்களின் பேச்சுப் பயனற்றுப் போகும்படி செய்ய முயற்சிக்காமல் அதிகாரத்தைக்கொண்டு, தடை உத்தரவு பிறப்பித்துத்தான், மதவாதிகள் தங்கள் மானத்தைத் தப்ப வைக்க முடியும் என்ற அளவுக்கு, ஏன் கீழே இறங்கிவிட வேண்டும்? வெட்கக்கேடான நிலைமை அல்லவா இது? மதம் அவ்வளவு மெல்லியதா—அல்லது அதைத்தாங்கிப்பிடிக்கும் சக்தி, உங்கட்கெல்லாம் இல்லையா? என் வந்தது, தடை போட்டாலொழிய முடியாது என்ற நிலைமை? சாயம் அந்த அளவுக்கு வெளுத்து விட்டதோ!!

இன்றும், மதத்தின் பெயர் கூறிக்கொண்டு பிழைப்பவர்கள் நடத்தும் பிரசாரம், கொஞ்சநஞ்சமல்லவே! ஊர்தோறும் நாள்தோறுமல்லவா, திருவிழா என்ற பெயரில் மதமாநாடு நடைபெறுகிறது! பஜனைக்கூடங்களிலே கிளம்பும் சத்தம், சங்கீத மண்டபங்களிலே எழும் நாதம், சினிமாக்களிலே உள்ள காட்சி—கூச்சல், இவ்வளவும் மதத்தின் ஆதரவுப் பிரசாரம்தானே! ஒவ்வொருநாளும், நடக்கிறதே சத்கதாகாலட்சேபம்—காரைக்காலம்மையை, கண்ணப்பரை, குகனை, அவனுடைய ஓடத்தில்ஏறிச்சென்றஇராமனை, அனுமனை அவன் வாலின்பெருமையை, இவைகளைப்பற்றி எல்லாம், பண்டிதமணிகள், ரசிகமணிகள், ஆனந்தர்கள், என்போர்கள் பேசியபடி உள்ளனரே. ஆஸ்ரமங்கள் உள்ளன! அங்கு ஈஸ்வரகடாட்சம் பெற்றவர்கள் உள்ளனர்! அவர்கள்நாவிலே நாதன் நர்த்தனமாடுகிறார்! இவ்வளவு இருக்கப் பயம் ஏன்? இவைகளில் ஒன்றுக்குமா சக்தி இல்லை. கருத்தறியாத சிலர் பேசுவதால் ஏற்படக்கூடிய மாறுதலைத் தடுக்க. இப்படிப்பட்ட அம்மியும் குழவியும் ஆகாயத்தில் பறக்கிறதே, ஆண்மையுமல்ல அறிவுமல்ல, என்று தெளிவுடையோர் எவரும் கூறக்கூடிய, தடை உத்தரவு வேண்டுமென்று சட்டசபைகளிலே தவம் இருக்கப்போவதாகச் சொல்கிறீரே, இது விந்தையாகத் தோன்றவில்லையா?

தோன்றுது! காரணம், நான் முதலில் சொன்னேனே 'அதிகாரம் கிடைத்ததும் ஏற்படும் சுபாவம்—அதுதான். தங்கள் பலத்தைக்காட்டுவதிலே ஒரு ஆனந்தம்.

மதங்களைக் கண்டிக்கக் கூடாது என்று ஒருதடை போட்டுவிட்டால், யார் யார் பேசக்கூடாது, எந்தெந்த இயக்கம் வளரக்கூடாது வாழக்கூடாது என்று எண்ணுகிறார்களோ, அவர்கள்மீது தடை! பேசாதே! பொதுக்கூட்டம் போடாதே!! என்று உத்தரவு போடலாம். ஏன் என்று கேட்பர். மதத்தைக் கண்டித்தாய்! என்று கூறிவிடலாம். எது ஐயா, மதக்கண்டனம் என்று கேட்பர்—எதுவுந்தான்—நீ பேசுவது எல்லாம் தான் என்று ஒருஅடி அடித்துவிடலாம் என்பதுதான் எண்ணம். இது தான், நான் முதலிலே குறிப்பிட்டேனே, அழிவுப் பாதை, அது. அதிலேவேகமாகச் செல்லும்படிகாங்கிரசைத்துரத்துகிறார் சகஜானந்தர்.

இனி, யார் யார் எதை எதை எங்கெங்கு சமயத்திலே மதத்தைக் கண்டிக்கும் பேச்சாகக் கருதினர், என்பதைக்கொஞ்சம் — சகஜானந்தர் அல்ல—காங்கிரசிலுள்ள மேதைகள் —சிந்திக்கட்டும் — அவர்களே திகைப்பர்.

இன்றுவரையில், குளத்தங்கரை ஐயர்கள், காந்தியாரை மதவிரோதி என்றேதான் கூறுகின்றனர்-ஏசுகின்றனர்.

இந்து மகாசபைக்காரரோ, காந்தியார், மற்ற மதக்காரருக்குச் சலுகை காட்டுவதன்மூலம், இந்து மதத்தையே நாசம் செய்கிறார்என்று தான் பேசுகின்றனர்.

பண்டிதஜவஹரின் பேச்சை, நாஸ்திகத்துடன் இணைத்தே பழமை விரும்பிகள் கூறுவர்.

ஆலயப்பிரவேசத்தை ஆதரித்து நடத்தப்பட்ட காங்கிரஸ் பிரசாரமெல்லாம், மதக்கண்டனம் என்றே தான் கூறப்பட்டுவந்தது.

சாரதாசட்டம், மதத்தை நாசம் செய்யும் செயல் என்று பேசப்பட்டது.

இவ்வளவும் வேண்டாம்-முதலமைச்சர் ஓமாந்தூராரின் சென்ற திங்கள் அறிவுரை இருக்கிறதே, கோயில்களில் மடங்களில் உள்ள பொருள்கள் மக்களின் நலனுக்குச் செலவிடப்பட வேண்டும், என்ற பேச்சு, இது, மகாமகா மதக்கண்டனம்.

இப்படி, சீர்திருத்தம் பேசும், எவரையும், பிற்போக்காளர், பழைமையால் பிழைப்பவர்கள், மதத்துரோகிகள், மதத்தைக்கண்டிப்பவர் என்றே தான் கூறினர்.

சாக்ரடீசுக்கு விஷம் கொடுத்துக் கொன்றபோது, மதத்தைக்கண்டிக்கிறான் என்றுதான் குற்றம் சாட்டினர்—இன்று அவனுடைய பின்சந்திகளான சீர்திருத்தவாதிகள் மீது தடை போடும்படி, கூறப்படுகிறது. இது சகஜம்! ஆனால் இதனால் பகுத்தறிவாளன் தன்பணியை நிறுத்தி விடமாட்டான். இப்போதாவது மதத்தின் பெயர் கூறி நடத்தப்படும் அக்ரமங்களைக் கண்டிக்கும் நேர்மை

யாளர்களை, தடை உத்தரவுபோட்டு அடக்கப்பார்க்கிறார்கள், இதே காரியத்துக்காக சகஜானந்தர்போன்று அதிகாரம் சாஸ்வதம், என்று எண்ணியவர்கள், சீர்திருத்தவாதிகளைச் சித்ரவதை செய்திருக்கிறார்கள்—நாவை அறுத்திருக்கிறார்கள் — கண்களைத்தோண்டி இருக்கிறார்கள்—நாடு கடத்தி இருக்கிறார்கள் — கழுவில் ஏற்றி இருக்கிறார்கள் — தீயிலே தள்ளி இருக்கிறார்கள். ஆனால், பகுத்தறிவு பரப்புவது இந்தக்கொடுமைகளைக்கண்டுஒய்ந்து விடவில்லை. சகஜானந்தர்கள், சிற்சபைக்குள்போனாலும் நடராஜனின் தாண்டவம் தடைப்பட்டுவிடாது என்று தில்லை தீட்சதர்கள் எண்ணுமளவுக்கு, பகுத்தறிவு வெற்றி பெற்றிருக்கிறது. இனியும் பகுத்தறிவே வெல்லும். ஆண்மை இருந்து, அறிவினிடம் நம்பிக்கையும் இருக்குமானால், ஆளவந்தவர்கள், நாக்கு அறுக்கும் முறையான தடை உத்தரவு போடாமல் "சூனாமானாக்கள்என்ன பேசினால்என்ன? மக்கள் மனம் மாறாது! நாங்கள், அவர்களின் வாதங்களைத்தவிடு பொடியாக்குவோம். அவ்வளவு ஆற்றலும் ஆதாரமும் எம்மிடம் உள்ளன" என்று அறை கூவி அழைத்திருக்க வேண்டும், பகுத்தறிவாளர்களை. அவர்களுக்குத் தங்கள் சக்தியிலே நம்பிக்கை இல்லை. நாம் பேசும் சத்தமோ, நாட்டிலே பரவுகிறது. என்ன செய்வது! நாக்கை அறுக்கிறேன் என்கிறார் சகஜானந்தர்! இதுசகஜம்—அதிகார போதையிலே ஆர்ப்பரிப்பது, சகஜம்.

"சிவன் நீ; சக்தி உன்மனைவி; விஷ்ணு நீ; லக்ஷ்மி உன் மனைவி; பிரம்மா நீ, சரஸ்வதி உன் மனைவி, இதைக்காட்டி மிருக நிலையிலிருந்த மனிதனைத் தேவநிலையில் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப்பள்ளிக் கூடங்களே கோவில்களாகும். இதைப் பூஜாரிகளே மறைக்கிறார்கள். கும்பிடுவோர் நித்ய அடிமைகளாகவும், தெய்வாம்சமுடையோர் தாமாகவும் இருந்தால் நல்லது என்று பூஜாரி யோஜனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது. அப்படி இருக்க பூஜாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப்பதாக நடித்து ஜனங்களை வஞ்சனை செய்து பணம் பிடுங்குகிறார்கள். கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்—எத்தனை நாள் ஒரு மோசக்காரன் மனிதனை மூடிவைத்து அவனிடம் தெய்வம் காட்ட முடியும். ஆகையால் இந்தப் பூஜாரியினுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப் போகிறது. ஜனங்கள் பூஜாரிகளை அவமதிப்பாக நடத்திப் பழய மாமூலை உத்தேசித்துக் கல்லை மட்டும் கும்பிடுகிறார்கள். அப்படிப் பட்ட கல், வரம் கொடுக்கவே கொடுக்காது.

கோவிலுக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி, பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் செய்யும்."

இவ்வாறெல்லாம் பேசியிருக்கிறார், இன்று அவர் புகழைப் பேசாதவர்கள் மிகச் சிலர், என்ற நிலையை அடைந்துள்ள ஒருமேதை—கலைஞர்—தேசபக்தர். யார் இவர்? மதத்துவேஷம் ஏற்படக் கூடிய விதமாக, மதத்தைக் கண்டிக்கும் முறையிலே, நமது புராதன மார்க்கத்தைப் பரிகசிக்கும் முறையிலே, இது போலப் பேசினார். போடு தடைஉத்திரவு!—என்று கூறத்தோன்றும் சாமி சகஜானந்தருக்கு. நல்ல வேளை, இவ்வகையில் பேசிய உத்தமர், இவருடைய கோபத்துக்கு ஆளாக முடியாது—அவர் காலஞ் சென்று விட்டார்—தேசீயக்கவி பாரதியாரின் பேச்சு, நாம் மேலே பொறித்திருப்பது. பாபாத்மாக்கள் மட்டமே தீண்டும், சூனாமானா ஏடுகளிலே இருந்து எடுத்ததுமல்ல, தேசபக்தியும் தெய்வ பக்தியும் சமஎடை கலந்துதரும் லோகோபகாரி எனும் இதழிலே இருப்பது 10—5—47ல்.

தமிழர்கள் ஜாதிகளை அடியோடு அழித்து, ஆழக்குழி வெட்டி அதைப் புதைக்க வேண்டும். பரம்பரை என்று பிதற்றிக் கொண்டிருக்கலாகாது. உலகப் போக்கின் வகையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதிருஷ்டம், சூலம், வினைப்பயன் முதலியவைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, சோம்பலைப் போக்கிக் கொண்டு உழைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மனிதப் பண்பு இன்னதென்று கண்டு பிடிக்கமுயல வேண்டும்.

இவர் யாரய்யா, விதி இல்லை, வினை இல்லை, ஜாதி இல்லை என்று பேசுகிறார்? ஜாக்ரதையாக இருக்கவேண்டும் இந்த ஆசாமி விஷயத்தில். மதத்தின் அருங்கனிகளை—புளிக்கும்—கசக்கும்—அழுகல்—என்று கூறும் இவரை ஒழித்தாகவேண்டும் என்று கூறத் தோன்றும் சகஜானந்தருக்கு — ஆசாமியார் என்பது தெரிகிற வரையில்! சொன்னவர், சூனாமானா கட்சியல்ல—தேசபக்தர், கலை நுட்பமறிந்தவர்—ஐயங்கார்—வ. ரா.

'இவாளெல்லாம் கூடவா இதுபோலப் பேசறா?' என்று கேட்பார் சகஜானந்தர். சாமிகளே! வேணபேர் உண்டு நாக்கறுக்கும் நற்காரியம் செய்யும்போது, அந்தக் கணக்கு உமக்குத்தெரிந்துவிடும்.

கடைவீதி சென்றேன், கனிவாங்க. "கூடைப்பழம் அப்படியே எடுத்துக் கொள்ளுங்கள். குறைந்த விலைக்குத் தருகிறேன். அதிக பணமில்லை, ஒரு ரூபா நாலணா கொடு" என்று ஒரு அம்மை கூறிடக் கேட்டேன். கூடை சிறியது தான்—ஆனால் அதிலே நிறையப் பழம் இருந்தது—பார்வைக்குத் தெரிந்தது—மகிழ்ச்சியுடன் உட்கார்ந்தேன், எதிரில், கூடையை என் அருகே இழுத்து, பழங்களைக் கிளறிப் பரிசோதிக்கும் எண்ணத்துடன். அம்மையோ, ஒரு பாய்ச்சல் பாய்ந்து கூடையைத் தன்னிடம் இழுத்துக் கொண்டதுடன், "போய்யா, பழம் வாங்கற ஆளெப்பாரு. கிளற ஆரம்பிச்சிட்டியா? எது சொத்தை, எது சொள்ளை, எது அழுகல்னு பார்க்கப் போறயா? போ, போ. உன்போல படியாது" என்று கூறிவிட்டாள், கோபத்துடன். அந்தக் கோபத்துக்குக் காரணம், பயம். பாபம்! கூடையிலே பாதிப்பாகம் அடிபட்ட அழுகலான, பழங்கள்—கிளறினால் வாங்க முடியாது என்ற முடிவுதானே கூறிவிடுவேன் என்ற பயம்.

பக்கத்துக் கடைக்காரனோ, வேறோர் ஆசாமிக்கு, பழங்களைஎடுத்து, துடைத்து, தான் ஒருமுறை பெருமையாகப் பார்த்துவிட்டு, "நீங்கவாங்காவிட்டாக்கூட போகுதுங்க—சும்மா பழத்தை எடுத்துப்பாருங்க தங்கம்-தங்கம்—தங்கம் மாதிரி இருக்கும்" என்கிறார். "ஒரு அரைடஜன் கொடு" என்று அந்தஆசாமி கேட்பதுஎன்காதிலே வீழ்ந்தது. கனிவாங்கச்சென்றநான்இச்சம்பவம் தந்த கருத்தைப் பெற்றுக்கொண்டு வீடுதிரும்பினேன். அந்தப்பழக்கடைக்கார அம்மைக்கு பயமும், அதன் காரணமாகக் கோபமும் பிறந்ததே, அதுபோல, ஏன், உங்கட்கும் ஏற்படுகிறது—மதத்தைக் கண்டித்துப் பேசகூடாது என்று தடைபோடவேண்டும் என்கிறீரே, கூடையைக் கிளறிப்பார்க்க வேண்டாம் என்று அந்த பழக்கடை அம்மை சொன்னதுபோல—ஏன்?—அழுகல் பழங்கள் அதிகமோ? அழுகல் பழங்களைக் கூடையில் போட்டு விற்க வரும்போது, கிளறிக்கண்டுபிடித்து விடுவார்களே என்ற எண்ணமும், அதையொட்டிப் பயமும், அதன் விளைவாகக் கோபமும், பிறக்கும். இது சகஜம்.

## மாஸ்கோ நோக்கி

மிச்ச இந்தியாவின் தூதுவராக, திருமதி விஜயலட்சுமி அம்மையார் செல்கிறார்கள் மாஸ்கோவுக்கு. அதேபோல, பாகிஸ்தான் தூதுவராக, பாஞ்சாலலீகர், மியான் இப்திகாருதீன் செல்கிறார் மாஸ்கோவுக்கு.

## பழங்குடி மக்கள்

பாகிஸ்தானில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கென்று, தனியாக பழங்குடி மக்கள் அமைப்பு ஏற்படும். இதற்காக பூனாவில், ஒரு பிரத்யேக மகாநாடு நடைபெறும். தோழர் மண்டல் தலைமை வகிப்பார் என்று தெரிய வருகிறது.

## பெட்ரோல்

பாகிஸ்தான் பகுதியைச் சார்ந்த அட்டாக் என்ற இடத்தில், பிரம்மாண்டமான எண்ணெய் கிணறுகள் உள்ளனவாம். எனவே, பெட்ரோல் நிலைமை, பாகிஸ்தானில் பலமாக இருக்கும்.

திராவிட நாடு

காஞ்சி] 3—8—47 [ஞாயிறு

# கனவும்—காட்சியும்!

இன்பக் கனவு கண்டேன்!
வெண்மணல் பரந்த இடம்!
ஓர் அழகிய நதிக்கரை!
மதி விரித்த வெள்ளி நிலவு!
குழல்! முறுவல்! மோகன
உருவம்!
ஏதேதோ! கண்டேன்!
இன்பத்தில் என்னை மறந்தேன்!

*கனவிலே, கவர்ச்சிமிக்க காட்சிகளைக் காணுகிறாள் ஓர் மங்கை, மேலே, கூறியுள்ளபடி, கனவை விவரிக்கிறாள் தோழியிடம்.*

விழித்தெழுந்தேன்-படுக்கையில்
புரண்டேன்.
நதியும் இல்லை! மதியின்
ஒளியும் இல்லை!
படர்ந்துபோக இருந்த விளக்கு
ஒருபுறம். பலகணி இடுக்கிலே
பகலவனின் கதிர்கள் எட்டிப்
பார்த்தன!
கண்ட கனவும், காணும் காட்
சியும் வேறு வேருகத்தானே
இருக்க முடியும்.
கனவு, கனவுதானே!

*என்று கூறி முடிக்கிறாள், தன் கனவுக்கும் உண்மைக்கும், இருந்த மாறுபாட்டினை.*

* * *

தோட்டம், குளுகுளுவென்று
இருக்கும்!
நீர்வளம் நிலவளம் நிறம்பிய
இடம் ஆகையால் உழைப்பு
அதிகம் வேண்டியதில்லை.
பணத்துக்குப் பஞ்சம் இல்லை.
தோட்ட முதலாளியோ தங்க
மான குணம்.
தோட்டத்துக்கு அடிக்கடி வந்து
தொல்லை கொடுக்கவே
மாட்டார்.
நான் கூடவேதானே இருப்பேன்-
கவனித்துக் கோள்கிறேன்.

*இன்னும் ,பலப்பலக் கூறினான் கூலிப்படை திரட்டவந்த கங்காணி. அடுத்த ஆண்டு, வெள்ளியிலேகாப்பு என்றான், ஐந்தாறு வருஷத்தில், பவுன்களோடு திரும்பலாம், உன் மனைவிக்கு நகை செய்துபோடலாம், என்று கூறுகிறான். பஞ்சநிலைமையிலே இருந்துவரும் பாட்டாளிக்கு கங்காணி, பாகுமொழி பேசுகிறான், ஆள் சேர்க்க, என்பது தெரிகிறதா! நம்பி, கப்பல் ஏறுகிறான். தோட்ட வேலையில் கைகால் முறிகிறது. கங்காணியின்பாகுமொழிமறைகிறது. அகராதியில் சேர்க்கப்பட முடியாத வார்த்தைகளை வீசுகிறான் ஆசை வார்த்தை பேசி 'அக்கரைக்கு' அழைத்து வந்தவன்! பிறகு தான், "ஆசை காட்டினான் பாவி! நம்பி மோசம் போனேம் அறிவற்று!" என்று தோட்டத் தொழிலாளி துயருற்றுக் கூறுகிறான்.*

'குளுகுளு' வென்று இருக்கும்
என்று வர்ணிக்கப்பட்ட
தோட்டத்திலே, குளிர்
கொட்டிற்று.
நீர்வளம், அதிகம்—எனவே நில
வளம், சேருக மாறிற்று.
முதலாளி, தோட்ட வேலைக்கா
ரருக்கு என்ன குறை என்று
கேட்கவே மாட்டார்-அவர் நக
ரிலே விருந்துண்டு மகிழ்வார்.
கங்காணி, தோட்ட வேலைக்கார
ருடன் தான் இருப்பார்-கையில்
சவுக்குடன்!

* * *

*கனவில் கண்ட காட்சி, நிஜமாகாது! காரியம் பலிக்கவேண்டுமென்று, தந்திரமாக ஆசை மொழி புகன்று, ஆளடிமை கொள்பவனின், பேச்சுக்கும், நடவடிக்கைக்கும், துளியும் பொருத்தமிராது.*

*இந்த இருவகையிலும், ஏமாற்றம் உண்டு—முன்னதிலே, ஏமாற்றத்துடன் அதிக வேதனை இராது—மற்றதோ ஏமாற்றத்துடன், வேதனையும் அதிகம் இருக்கும். கனவில் கண்ட காட்சி பொய் என்பதும், கங்காணியின் பேச்சு வெறும் மோசம் என்பதும், வேதனை தருவது மட்டுமல்ல, புதுத் தொல்லைகளுக்கு வித்திடுவதாகவும் முடியக் கூடும்.*

*இங்கு ஏற்பட்டுள்ள 'விடுதலை நிலைமை', சுயராஜ்ய உதயம்—இந்த இருவகைகளையும், நமது நினைவிற்குக்கொண்டு வருவதாக இருக்கிறது கனவில் கண்ட காட்சி! கங்காணியின் பேச்சு! இரண்டும் இங்கு இருந்திருக்கிறது. விடுதலைப் போர் நடாத்தியவர்களிலே முன்னணியினர், கனவு கண்டுள்ளனர்—ரசமானகனவு. இன்று, அவர்கள் உண்மைக் காட்சிகளைக் காணும் நாள் பிறக்கிறது. கனவுக்காட்சி வேறு, காண்பது வேறு என்பதை உணருகிறார்கள். இதைக் கண்ணியமானவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். பண்டித ஜவஹர் தமது வானொலிப் பேச்சிலே சொன்னார், "நாம் நமது இந்தியாவைப் பற்றி என்னென்னமோ இன்பக் கனவுகளெல்லாம் கண்டோம். ஆனல் உண்மைக்காட்சி வேருகத் தான் இருக்கிறது. கனவில் கண்டபடியேவா காட்சி இருக்கமுடியும்!" என்றுஏக்கத்துடன்பேசினார். அந்தஏக்கம், ஓர் இலட்சியவாதியின், விழிப்புற்ற இலட்சிய வாதியின் ஏக்கம்!*

*புயலையும் சட்டை செய்யோம் என்ற புன்மொழி பேசுவோர் நிலையிலுள்ள போர்ச்சுகல், பிரன்ச்சு, ஏகாதிபத்யங்கள்.*

*பட்ட கடனைத்தரமுடியாத நிலையில் இருக்கிறேனே என்று பேசிப் ப்சப்பும் பிரிட்டன்.*

*"ஆவலாகினேன் உன் மேலே! அருகில்வரலாமோ இனிநானே!" என்று காதற்கீதம்பாடிடும் காசாசை பிடித்த அமெரிக்கா.*

*இப்படிப் பலப்பல உள—இவை கனவிலே கண்டவையல்ல! கனவிலே கண்டது, நாடு மலர்க்காடு! எங்கும் நறுமணம்! வீடெல்லாம் கீதம்! காணும் இடமெலாம் களிப்பு! இப்படிப்பட்டவைகள் கனவில். உண்மையின் உருவம், அவ்வளவு உவகை தருவதில்லை. ஆனல், நாட்டுப்பற்றுடன் நானில வரலாற்றையும் இணைத்துப் பார்ப்பவர்கள், "நாம் கண்ட கனவின்படியே காரியம் நடக்குமென்று எதிர்பார்க்க முடியாது" என்பதை உணருகின்றனர்.*

*ஆனல், மற்றவர்களின் மனமோ, இன்னமும், அவ்விதமான பண்பு பெறவில்லை, இன்னமும் கனவுலகிலேயே உள்ளனர். அவர்கள் அடையப்போகும் ஏமாற்றம்கொஞ்சமல்ல. மேலும் அவர்கள் தான் கங்காணியின் பேச்சுபோல, மக்களிடம் பலப்பலகூறி இருக்கிறார்கள்—தேனும் பாலும் ஓடச்செய்வோம் என்று. சொன்னபடி செய்யாதிருப்பதால் மக்கள் ஏமாற்றமடைந்து வேதனையுமடைந்து, கேள்விகேட்கும் நாள்*

விரைவிலே வருகிறது! வெற்றிக் கொண்டாட்டத்திற்குப் பிறகு, இந்த வேதனை இருக்கிறது. இச்சமயந்தான், "கங்காணிச் சுபாவம்," புதியசிக்கல்களை உண்டாக்கும். அதற்கேற்ற மனப்போக்கும் சூழ்நிலையுமே இருக்கக் காண்கிறோம். எனவேதான் அன்புடன், பொறுப்புடன், அவர்கட்குக் கூறுகிறோம், கங்காணிப் பேச்சை நிறுத்திவிடுங்கள்—காரியத்திலே காட்ட முன்வாருங்கள்! நல்வாக்கு கொடுத்து வந்தநாள் போதும், இனி நல்லாட்சியின் இலட்சணத்தின்படி நடக்க முன்வாருங்கள் என்று.

வரலாற்றிலே மிக முக்கியமான சம்பவங்கள் உருவாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்—அந்த நிலையை அவ்வளவாக உணராமலேயே கூட. மிக மகத்தான மாறுதல்கள், நம் கண்முன்பு நடந்து கொண்டே உள்ளன. பெரும்பாலானவர்களின் பார்வையோ அந்த மாறுதல்களைக் காண்பனவாக இல்லை! மக்களில் பெரும் பிரிவினரின் கண்களுக்குத் தெளிவாகத் தெரியாவிட்டாலும், அவர்களின் எதிர்கால வாழ்க்கையை சாதகமாகவோ பாதக மாகவோ ஆக்கக்கூடிய சம்பவங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. நமதுபின்சந்ததிகள் சரிதத்தில் எதைப் பாடமாகப் படிக்கப் போகிறார்களோ, அவைகளை இன்று, சர்வசாதாரணச் சம்பவங்கள் என்ற அளவிலே சிலரும், எங்கேயோ எதுவோ நடக்கிறது என்று மிகப்பலரும் எண்ணிக் கொண்டுள்ளனர்.

பொதுவாகக் கவனிக்கும்போது, ஒரு பெரிய, அடிப்படை உண்மைக்கு இப்போது வெற்றி கிடைத்து வருகிறது, அதாவது ஒரு நாட்டின்மீது மற்றொரு நாடு ஆதிக்கம் செலுத்துவது, அரசியல் காட்டு மிராண்டித்தனம், என்பது தெளிவாகி, நாடுகள், தத்தமது உரிமையைப் பெறும் வேளை வந்துவிட்டது.

ஆதிக்கக்காரர்கள், தமது பலம் சரியும் போது, தந்திரத்தைத் துணைகொள்ள முயற்சிப்பதும், அதுவும்பலிக்காதபோது, நடந்ததை மறந்துவிடுவோம் இனி நாம் நண்பர்களாவோம் என்று சொந்தம் பாராட்டுவதும் சகஜம். அம்முறையை, இந்திய உபகண்டத்தைப் பொறுத்தவரையில் பிரிட்டன் கையாளுகிறது. இந்த அம்சம் ஒருபுறம் இருக்க, ஒவ்வொரு நாடும், அரச உரிமை பெறுகிறபோது, எல்லைத் தகராறுகளும், நாட்டிலேயே, தனி அமைப்புகள் ஏற்பட்டாக வேண்டிய நிர்ப்பந்தத் தகராறுகளும், ஏற்படுவதும் இயல்பு. நாம் ஒரு இருநூறு ஆண்டுகள், அரச உரிமை இழந்து, அன்னியராட்சியிலே இருந்து வந்ததால், இவ்விதமான பிரச்னைகளும் எழக்கூடும் என்று எண்ணவே நம்மவர்களால் முடியவில்லை. இப்போது, எல்லைக் கோடு, போடுவது முதற்கொண்டு என் கலை, என் மொழி என் இனம் என்பது வரையிலே, பேசப்படுகின்றன —இது, இப்படிப்பட்ட பிரச்னைகள் எழக்கூடும் என்ற எண்ணமே கொண்டிராத மக்களுக்கு, புரியாதனவாகவும் திகைப்பளிப்பனவாகவும் உள்ளன. சிலருக்குக் கோபமேகூட வரும்—"என்னய்யா இது! அந்தப் பாவி வெள்ளைக்காரன்தான் இருநூறு வருஷ காலமாகப் பிடித்துத் தொல்லை தந்தான். இப்போது என்னமோ, யார் செய்த புண்யமோ, அவனே ஒழிந்துபோகிறான்—சுகப்படலாம் என்று நினைத்தால், நமக்குள்ளாகவே ஆயிரத்தெட்டு தகராறுகளைக் கிளப்பிக்கொண்டு, நாட்டில் குழப்பத்தை உண்டாக்கிக்கொண்டு, ஒருவருக் கொருவர் அடித்துக்கொண்டு சாகிறார்களே." என்று கூறிச் சோகிக்கத்தான் தோன்றும். துக்கம், திகைப்பு, கோபம், எது ஏற்படினும் என்ன? அந்தப் பிரச்னைகள் கிளம்பித்தான் தீரும். எங்கும் உண்டு. அதிலும் இங்கு, எழுவதிலே ஆச்சரியம் இல்லை, இவ்வளவு காலம் எழாமல் இருந்ததுதான் ஆச்சரியம்.

மற்ற நாடுகளிலேயாவது, "நமக்குள்ளே ஏன் தகராறு?" என்று கேட்கும்போது, ஒரே நாட்டு மக்கள், ஒரே மதம், ஒரே மொழி, கலை, எனும் 'பந்தங்கள்' உண்டு என்று பொருள்படும். இங்கு அதுவும் கிடையாது. இங்கு நெடுங்காலமாக, என்றலும், — இருந்தபோதிலும் — என்று பேசிக்கொண்டே நாம் காலங் கடத்திவந்து விட்டோம்—ஒரு பிரச்னையையும் தீர்க்காமல், ஒரு சிக்கலையும் அறுத்தெறியாமல். இந்து — முஸ்லீம் என்று நாம் இரு வேறு மதக்காரர்களாக இருந்தபோதிலும், பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ர என்று இந்துவே நாலு வருணமாகப் பிரிந்து இருந்தபோதிலும், நாம் அனைவரும் இந்தியர்—என்று கூறி வந்தோம் — அவ்விதம் கூறிக் கொள்வதிலே நமக்குப் பூரிப்பும் பெருமையும்கூட இருந்தது. இப்போது, பூரிப்பும் பெருமையும், பயன்தரவில்லை என்பதை உணருகிறோம். இருந்தபோதிலும் என்ற சொல், வழக்குக்கு ஈரங்கிபோட உதவிற்றே யொழிய, வேறில்லை என்பது விளக்கமாகிவிட்டது. புதிய பிரச்னைகள் போல இன்று காணப்படுபவை அனைத்தும், உண்மையில் புதிதல்ல, நெடுங்காலமாக, ஈரங்கி போடப்பட்ட வழக்குகள்—ஊனர் வியாஜ்யங்கள்!! கொஞ்சம் தொல்லைதான், தரும். பிரச்னைகளை இம்முறையேனும் நிரந்தரமான விதத்திலே தீர்த்துவிட வேண்டும். எனவேதான், வெற்றிக் களிப்பிலே, மீண்டும் கனவு காணும் நிலைக்குச் சென்றுவிடாமல், பழயபடி மக்களுக்கு ஆசை மொழி பேசும் வித்தையிலேயே நம்பிக்கையை வைத்து காலந்தள்ளாமல், பிரச்னைகளைக் கவனிக்க — சிக்கல்களைப் போக்க — முன்வர வேண்டும் என்கிறோம்.

**திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்.**

இந்தப் பிரச்னையைக் கவனிக்க மறுப்பது, எதிர்காலத்தைச் செம்மையாக்கும் செயலல்ல. கன உலகை விட்டுக் கீழே நடமாடும் நிலைபெற்ற தலைவர்களும் சரி, கங்காணிப் பேச்சு, காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் முறை என்று எண்ணுபவர்களானாலும் சரி, இந்தப் பிரச்னையை, அலட்சியப்படுத்துவது, நாட்டை மேல் நிலைக்குக் கொண்டுவரும் போக்காகாது என்பதை உணரவேண்டும். சர்ச்சில், எவ்வளவு பிடிவாதமாகக் கூறினான், "இந்தியா, சுயராஜ்யத்துக்கு லாயக்கில்லை—பக்குவத்துக்கு வரவில்லை—" என்று. இன்று? சர்ச்சிலின் திட்டம் தகர்ந்தது! அந்தத் திருநாள் கொண்டாடும்போது, அதே சர்ச்சிலை, நமது நண்பர்கள், தங்கள் உள்ளங்களிலே குடியேறச் செய்துவிட வேண்டாம், என்று கூறுகிறோம். இன்றுள்ள பலம், சபலம், புதிய களிப்பு, இவைகளின் பிடியில் சிக்கி நிலைமை, சூழ்நிலை, சிதறுண்டு கிடக்கும் பல்வேறு சக்திகள் ஒருமுகமாகத் திரட்டப்படக்கூடும் என்ற உண்மை, இவைகளை மறத்தல் கூடாது நாட்டுக்குப் புதிய நிலையும் நாடாள்பவருக்குப் பழைய மனோபாவமும் இருந்தலாகாது — வண்டிக்கு நல்ல குதிரையும், பழுதான அச்சும் இருப்பதற்கு ஒப்பாகும் அது. அது நல்லதல்ல.

★

## பாகிஸ்தானுக்கு

—0—

பாகிஸ்தானில், உத்தியோகம் வகிக்க, முஸ்லீம்கள் மட்டுமல்ல, இந்திய பூபாகத்திலே பல்வேறு பகுதிகளிலிருந்து, இந்து, பார்சி, சீக்கியர், கிரிஸ்தவர், ஆகியோரும் மனு அனுப்பியுள்ளனர். அவர்களில் பலர், உயர்தரமான படிப்பும் யோக்கிய தாம்சமும் உள்ளவர்கள். ரஷியர்கள் சிலர் கூட, பாகிஸ்தானில் பணிபுரிய முன் வந்துள்ளனர் என்று பாகிஸ்தான் சர்க்கார் அலுவலகத்துக்கு வர இருப்பவர்கள் பற்றித் தகவல் சேகரித்து வரும் டாக்டர் குரேஷி அறிவித்திருக்கிறார்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யவும் ஆரம்பித்துவிட்டான்.

* * *

சில ஆண்டுகள் சென்றன. ரிசால் மணிலாக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது சிறையிலிருந்து விடுதலை அடைந்து வீடுவந்தாள், அவனது அருமை அன்னை. மகனது அறிவின் வளர்ச்சியைக்கண்டு அகமகிழ்ந்தாள். பல துறைகளிலும் அவனுக்கு ஊக்கமளித்து வந்தாள்.

மணிலாக் கல்லூரியிலே, ஆசிரியர்களது அன்பையும் மதிப்பையும் பெற்றான். மாட்ரிட் சர்வகலாசாலைக்குச் சென்று என்ஜினீரிங் படித்து முதன்மையாகத் தேர்ந்தான். பாரிஸில் பிரெஞ்சும் மருத்துவமும் கற்றான். பெர்லினில் ஜெர்மனியும், ரசாயனக் கலையும், யந்திரக்கலையும் பயின்றான். இப்படியாக அவன் பல சர்வகலாசாலைகளில் பயின்று, மருத்துவம், சட்டம், தொழிற் கல்வி, கலை, ஆகிய பலதுறைகளிலும் பரந்த அறிவைப் பெற்றான்.

பிலிப்பைனர்களது வரலாறுகளை எல்லாம் ஆழ்ந்து வாசித்தான். வீரரும் தீரரும் வாழ்ந்தநாடு வீழ்ச்சியுற்ற காரணமென்ன என்பதையும் தீர யோசித்தான். பாரிஸிலே கண் வைத்தியத்திற்காக வாசித்துக் கொண்டிருந்தபோது 'பிலிப்பைன்' (Phillipine) என்றொரு ஆராய்ச்சி நூலைத்தீட்டினான். 1887-ம் ஆண்டு முதன்முறையாக அந்நூலை வெளியிட்டான். 'பிலிப்பைன் இயற்கை வளம் நிறைந்த நாடு. காப்பி, கரும்பு, ஏலம், கிராம்பு, புகையிலை முதலியன அங்கு செழித்து வளர்கின்றன. சிறந்த துறைமுகங்கள் பல உண்டு. எல்லா வளங்களுமிருந்தும் எங்கள் நாட்டவர் உண்ண உணவில்லையே, உடுக்க உடையில்லையே, படுக்கப் பாயில்லையே என்று கதறுகிறார்கள், கண்ணீர் சிந்துகிறார்கள். அன்னியர் ஆட்சியிலே பயந்து பயந்து சாகிறார்கள்.

பிலிப்பைனர்கள் நல்ல ஒழுக்கமுள்ளவர்கள் இயற்கைதான்நாங்கள் வழிபடும் கடவுள். சிறந்த குணங்கள் தான்எங்களது அணிகலங்கள். பரம்பரையாக பலசாலிகள் வீரர்கள், அப்படியிருந்தும் அன்னியரது பிடியில் சிக்கி இன்னலடைகிறோம். இன்றும் பிலிப்பைனிலே சிறந்த கவிகளும் சிற்பிகளும் வாழ்கிறார்கள்.

பெண்கள் கற்பிற்சிறந்தவர்கள். ஆண்கள் நாள்முழுவதும் உழைப்பவர்கள். உழைப்பிற்கேற்ற பயனை அடையாமல் உழல்கிறார்கள் வறுமையில். ஸ்பானியர் எங்கள் நாட்டுப் பொருள்களை எல்லாம் தங்கள் நாட்டுக்குக் கொண்டு போய்விடுகிறார்கள். எங்கள் நாட்டவர் செய்வதறியாமல் கண்ணீர் கசிகிறார்கள்.

எங்கள் உழைப்பிலேயே நாங்கள் பிழைப்பவர்கள். பிற இனத்தாரது உழைப்பிலே உல்லாச வாழ்க்கையை நடத்துபவர்கள் அல்ல நாங்கள். அன்னிய நாடுகளை அடிமைப்படுத்த என்றுமே எண்ணியதில்லை நாங்கள். ஆனால் அன்னியர் எங்களை அடிமைப் படுத்திக்கொடுமை செய்கிறார்கள். எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்று நினைப்பவர்கள் நாங்கள்.

இப்படியாக அந்த நூலிலே மிக மிக உருக்கமாகவும், வீரமாகவும் தன்னாட்டைப்பற்றி எழுதியிருந்தான். அந்த நூலின்மூலம், தன்னாட்டார் அடையும் வேதனையை வெளிநாட்டார் அறியச்செய்தான்.

ஐரோப்பியர் பலர் அந்நூலைப் படித்த பின்னர்தான் பிலிப்பைனரும், தங்களைப் போலவே நாகரிகமுள்ளவர்களே அன்றிக் காட்டுமிராண்டிகள் அல்ல வென்பதை உணர்ந்தனர்.

அந்நூலைக் கண்டு அலறினார்கள் ஸ்பானிய அதிகாரிகள். 'பிலிப்பைன்' என்ற புத்தகம் நாட்டினுள்ளே வரக்கூடாது என்று தடை விதித்தார்கள். "பிலிப்பைன் என்ற புத்தகத்தைப் படித்தாலோ அல்லது படிக்கப் பக்கமிருந்து கேட்டாலோ அல்லது அதைப்பற்றிப் பேசினாலோ உடனே அவர்களது சொத்து முழுவதையும் பறிமுதல் செய்து, நாடுகடத்தப்படுவார்கள். அந்நூலை வைத்திருப்பவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு நிறைய இனாம் கிடைக்கும்!" என்று ஒரு சட்டம் செய்து விளம்பரப் படுத்தினார்கள்.

ஸ்பெயினில் வியாபாரம் செய்யும் நாணயமுள்ள பிலிப்பைனர்களைக் கண்டு, அவர்களுக்குத் தேசபக்தியை ஊட்டினான். அவர்களது உள்ளங்களிலிருந்த கோழைத்தனத்தை ஓட்டினான். "இந்தப் புத்தகத்தை நம் நாட்டவர் அவசியம் படித்தல் வேண்டும். இரகசியமாக இதனைச் சென்று, நம்மவருக்குத்தாருங்கள்!" என்று கூறி அவர்களிடம் பல புத்தகங்களைத் தந்தான்.

இப்படியாக அந்நூல் பிலிப்பைன் முழுவதும் பரவிவிட்டது. அந்நூலைப் படித்து அறிவும் தெளிவும் பெற்றோர்கள் மன எழுச்சி கொண்டு தன்னாட்சிக்கழகமொன்றை ஏற்படுத்தினார்கள். அதற்குத் தலைவராக இருக்கும்படி ரிசாலுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினார்கள்.

"நான் தொண்டனாகவே இருக்க ஆசைப்படுகிறேனே அன்றித் தலைவனாக இருக்கப்பிரியப்படவில்லை. மன்னிக்கவும்!" என்று பதிலெழுதி, தனக்குத் தலைமைப் பதவி வேண்டாமென்று மறுத்துவிட்டான்.

* * *

ரிசால், உறுதியான உடலும், அழகான தோற்றமும் உள்ளவன். உயரமாக வளர்ந்திருந்தான். அவனது முகப்பொலிவும், கவர்ச்சிகரமான கண்களும், அனைவரையும் சுலபத்திலே வசப்படுத்தின. நகைச்சுவையுடன் பேசுவதில் இணையற்றவன்.

அவனது அழகிலே ஒரு பிலிப்பைன் அழகி தன் உள்ளத்தைப் பறிகொடுத்தாள். ரிசாலும் அவளை உயிர்போலக் காதலித்தான். வெளிநாடுகளில் படிக்கச் சென்றிருந்த ரிசால் அடிக்கடி தன் காதலிக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தான்.

அழகியின் தாய் ரிசாலை வெறுத்தாள். காரணம் அவனொரு புரட்சிக்காரன் என்ற பயத்தால். ரிசால் எழுதும் காதற் கடிதங்களொன்றும் அழகியிடம் சேராமல், அவள்தாய், தபாற்காரனிடம் வாங்கித் தான் படித்து விட்டுத் தீயில் போட்டு விடுவாள்.

காதலனிடமிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லையே என்று ஏங்கினாள் பெண். வெளிநாட்டுப் பெண்களது காமவலையில் சிக்கித் தன்னை மறந்து விட்டானோ என்று சந்தேகித்தாள். அதற்கேற்றாப் போல அவள் தாய் ரிசாலைப் பற்றிப் பொய்த் தகவல்களை கொடுத்துக்கொண்டிருந்தாள். ரிசால், தனக்குத் துரோகம் செய்து விட்டானென்றே தீர்மானித்துவிட்டாள். தாயின் பலவந்தத்தால், வேறொருவனுக்கு மனைவியானாள். ரிசாலினது அழகிய உருவம் அவள் உள்ளத்திலிருந்து மறையவேயில்லை. அவனை எண்ணி யெண்ணி ஏங்கினாள். நாளுக்குநாள் அவள் உடல் மெலிந்து கொண்டே வந்தது. சில மாதங்களில் இறந்தாள்!

காதலி பிணமானாள் என்று கேள்

விப்பட்டதும் ரிசால் கண்ணீர் விட்டுக் கதறினான்.

* * *

1891 ஆம் ஆண்டு "எல் பிலிபஸ்டரிஸ்மோ" (El Filibusterismo) என்ற நாவலை எழுதினான். சிதைந்த தன் காதலைப் பற்றியும், சீரழிந்த தன் நாட்டைப் பற்றியும் அதிலே தீட்டியிருக்கிறான்.

அச்சமயம் அவன் அன்னையின் கண்கள் முதுமையால் மங்கினது. "மகனே! மங்கிய என் கண்களுக்கு ஒளி தர வா!" என்றொரு உருக்கமான கடிதத்தைத் தீட்டினாள் ரிசாலுக்கு.

தாயைக் காணக் கப்பலேறித் தன் தாய் நாட்டிற்கு வந்து சேர்ந்தான். அவளது கண்களைக் குணப்படுத்தினான்.

தேசத் தொண்டர்களை இரகசியமாக அழைத்துத் தன் திட்டங்களை எல்லாம் கூறினான். 1892 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தன் வீட்டிலே "பிலிப்பைனர் இரகசியச் சங்கம்" என்றொரு சங்கத்தை ஏற்படுத்தினான். பல இளைஞர்களும் தொழிலாளர்களும் அச்சங்கத்தில் சேர்ந்தார்கள்.

ஒரு நாள் திடீரென்று அதிகாரிகள் ரிசாலை நாடு கடத்தினார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று தன் நாட்டில் நடக்கும் கொடுங்கோலை எடுத்துக் கூறினான். பின்னர் ரிசால் ஹாங்காங்கில், கண் வைத்தியத் தொழிலை நடத்த ஆரம்பித்தான். நல்ல வருவாயும் கிடைத்தது. கிடைத்த பணத்தைத் தன் நாட்டின் நலத்திற்காகவே செலவிட்டான். அங்கே அவன் அனேக நூற்களை எழுதினான். அன்னியரைத் துரத்தி விடுதலை பெற பற்பல வழிகளைக் காட்டியிருந்தான் அவைகளிலே.

பல பத்திரிகைகளிலே சிறு கதைகளும் கட்டுரைகளும் தீட்டிக்கொண்டிருந்தான். அவைகளை எல்லாம் படித்து ஸ்பானியர்கள் கொதித்தார்கள். என்ன செய்வதென்றே அவர்களுக்கு புரியவில்லை. கடைசியில் ஒரு குறுக்கு வழியைக் கண்டு பிடித்தார்கள். ரிசாலினது சுற்றத்தார்களை எல்லாம் சிறையிலடைத்துக் கொடுமைப் படுத்தினார்கள். இதனை அறிந்ததும், "அரசாங்கமே, என் மேலுள்ள ஆத்திரத்தை என் சுற்றத்தாரிடம் காட்டாதே, இதோ நானே அங்கு வருகிறேன்!" என்று கூறி மணிலா வந்து சேர்ந்தான் மாவீரன்.

ரிசாலைப் பிடித்து ஸ்பானியர், டாபிடான் (Dapitan) என்னுமிடத்தில் கைதியாக வைத்தனர். அந்த ஊர் முழுவதும் சுதந்திரமாகச் சுற்ற அரசாங்கம் அவனுக்கு அனுமதி அளித்திருந்தது. டாபிடான் ஒரு செழிப்பான இடம். பலவிதமான மூலிகைகள் அங்கே முளைத்திருந்தன.

அங்கே ஒரு சிறிய பாடசாலையை ஏற்படுத்திப் பதினான்கு மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தான். அங்கே கண் வைத்தியமும் செய்ய ஆரம்பித்தான்.

கண் வைத்தியத்திற்காக ஒரு அழகிய ஐரிஷ்பெண் அடிக்கடி வந்து கொண்டிருந்தாள். அவளொரு எழில் மிக்க இளம்பெண்! பாசத்தோடு பழகினாள்! அன்பாகப் பேசினாள்! அவளது பேச்சும் பார்வையும் அவனது உள்ளத்தில் இறந்த காதலை மலரச் செய்தது! அவன் உள்ளத்தில் அவள் நிறைந்தாள்! மனம் கவர்ந்த அச்சுந்தரியையே ரிசால் மணந்து கொண்டான். அவளும் தன் கணவனோடே பொதுத் தொண்டில் ஈடுபட்டாள்.

* * *

ரிசாலினது அறிவும், ஆராய்ச்சியும், வீரமும் மிக்க கதைகளையும், கட்டுரைகளையும்பிலிப்பைனர்கள்ளத்தனமாகப் படித்துக் கொண்டிருந்தார்கள். அவனது எழுத்துக்கள் அவர்களிடம் போர்முரசு கொட்டின.

"அடிமையாய் இருந்தது போதும் அன்னியரை வீழ்த்தத் தயாராகுங்கள். தரணிக்கு நம் திறமையைக் காட்ட தக்க சமயமிதுதான்! சஞ்சலங்களை மறந்து சமர்தொடுக்கச் சித்தமாகுங்கள்! நம் நாட்டில் பிற நாட்டார் வந்து கொக்கரிக்கிறார்களே, நாமென்ன கொக்குகளா அவர்களுக்குப் பயந்து ஓட! வாடி வதைந்து நம் துக்கத்தைப் பாடிப் பயனில்லை! இவ்வளவு நாட்களாக, அவர்களைக் கண்டு அஞ்சி ஓடி ஒளிந்தது போதும். நாம் பிறந்த மண்ணிலே இவ்வளவு காலமாக வியர்வையைச் சிந்திப் பார்த்தோம், பலனொன்றும் கிடைக்கவில்லை. இனி வியர்வையைச் சிந்துவது விபர்ந்தம். இரத்தத்தைச் சிந்துவோம்! வேற்றுரை ஓட்டி வெற்றி முரசு கொட்டுவோம்! கூடிச் செயலாற்றுவோம் வாரீர்!"

இப்படியாக ரிசாலினது எழுத்துக்கள்பிலிப்பைனர்களிடம்பேசின! அவர்கள் உள்ளங்களிலிருந்த கோழைத்தனத்தை ஓட்டின! வீரத்தை ஊட்டின!

புரட்சி எரிமலைப் புகைந்து வெடித்துக் கனல் கக்கியது. 1896ம் ஆண்டு புரட்சி! புரட்சி!! ரிசாலும், அவன் மனைவியும் டாபிடானிலிருந்து மணிலா வந்து சேர்ந்தார்கள்!

புரட்சிக்காரர்களைப் பிடித்துக் கடுமையாகத் தண்டித்தார்கள் ஸ்பானியர். நாட்டாரைச் சுட்டுக்கொன்றார்கள். ரிசாலைப்பிடித்தனர்! கைது செய்து சிறையிலடைத்தனர்!

இராணுவ நீதி மன்றத்திலே, ரிசாலினது வழக்கு நடந்தது. "நீ, சட்டத்திற்கு விரோதமாக பிலிப்பைனர் இரகசியச் சங்கத்தை ஏற்படுத்தினாய், இது முதற் குற்றம்! எங்கள் துப்பாக்கியையும் எதிர்க்குமளவு பிலிப்பைனர் உள்ளங்களிலே புரட்சிப் புயலை உண்டாக்கியது உன் பேனா, இது நீ செய்த இரண்டாம் குற்றம்!" இவைகள்தாம் ரிசால்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள்.

சுதந்திரத்திற்கு உழைத்தவீரனைச் சுட்டுக்கொல்ல தீர்ப்புக் கூறப்பட்டது!

* * *

இரவு நேரம்! சிறையில் ரிசால்! சிறிய விளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது. ரிசால் மங்கிய ஒளியில் எழுத ஆரம்பித்தான்.

"தாய்நாடே! உன் நலத்திற்காகத் தருகிறேன் உயிரை! விடுதலை அடைந்து நீடூழி நீ வாழ்க. பொன்னாடே, உன்னை விட்டு நான் பிரிகிறேன்!

என்னைப் பெற்று வளர்த்த தாயே, தந்தையே! ஆசையாய் வளர்த்து என் அறிவைப் பெருக்கினீர்கள். ஒரு அரிய செயலுக்காக ஆவியை விடுகிறேன்! பெருமைப்படுங்கள், வருந்தாதீர்கள்!

அருமை மனைவியே! எனதுயிரே! நாட்டை மீட்க உயிர் விடுகிறேன்! அதைக் கண்டு மகிழவேண்டும் நீ! மனக்கலக்கமடைதல் கூடாது!

நண்பர்களே! நாட்டை மீட்டு நலமோ இருங்கள்! நான் கண் மூடுகிறேன்! கலங்கப்படாதீர்கள்! கடமையைச் செய்யுங்கள்!"

இவ்வாறு "என் கடைசி பிரிவு"

என்றொரு உணர்ச்சி பொங்கும் பாடலைஎழுதிமுடித்தான். அப்பாடல்தான் இன்றைய பிலிப்பைனர்களது தேசியக்கீதம்!

* * *

1896-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் தேதி காலை கதிரவன் கிழக்கே சிறிது சிறிதாக வெளியே வந்துகொண்டிருந்தான். சாண்டியாகோ கோட்டையிலிருந்து (Fort Santiago) கால்நடையாகவே ரிசாலைத் தூக்குமேடையிருந்த இடத்திற்கு அழைத்துச்சென்றார்கள்.

தூக்குமேடைக்குச் சென்று கொண்டிருந்த ரிசாலுக்குப் பின்னால், நீர் சிந்திய கண்களோடு கும்பல்கும்பலாகப்பிலிப்பைனர்வந்து கொண்டிருந்தார்கள்.

தூக்குமேடையின் மேலே ரிசாலை ஏற்றினார்கள். தூக்குமேடையைச் சுற்றிலும் துக்கத்தால் துடிதுடிக்கும் பிலிப்பைனர் நின்று கொண்டிருந்தனர். ஒருபக்கத்தில்ரிசாலினதுதாயும், தந்தையும், மனைவியும், சுற்றத்தார்களும், துயரத்தில் ஆழ்ந்த உள்ளங்களோடு நின்றிருந்தனர்.

“கடைசியாக நீபேச விரும்பினால் சிறிது நேரம் பேசலாம்!” என்று ஸ்பானிய அதிகாரி ரிசாலுக்கு உத்தர விட்டான். ரிசால் ஏறுபோல் எல்லோரையும் வீரத்தோடு நோக்கினான். பெருந்துயரில் ஆழ்ந்து துடிதுடிக்கும்கூட்டத்தைக்கண்டான்.

“பெரியோரே! இளைஞர்களே! இடுக்கணிலே சிக்கியுள்ள நமக்கு இறப்புச் சர்வசாதாரணம். சாவுக்கு அஞ்சிச் சலிப்பவர்கள் அல்ல நாம்! விசனத்தை மறந்து விட்டு வீரத்தைக் காட்டுங்கள்! ஏகுகிறேன்! என் கடைசி வணக்கம்! எழில் நாட்டிற்கு மீட்சி தாருங்கள்! அரசு நமதே என்று முரசு கொட்டுங்கள்!”என்று வீரத்தோடு பேசி முடித்தான். உடனே அதிகாரி ஒரு கறுப்புத் துணியால் அவன் முகத்தை மூட வந்தான். கறுப்புத் துணியால் என் கண்களை மூடவேண்டாம்! என் கண்கள் திறந்தே இருக்கட்டும்! பெற்ற நாட்டைப் பார்த்துக் கொண்டே என் உயிர் பிரியட்டும்! உடன் பிறந்த வீரர்களது முகங்களைப் பார்த்துக் கொண்டே என் உடலிலிருந்து உயிர் பிரியட்டும்!” என்று கெஞ்சினான். ‘சரி!’ என்றான் அதிகாரி.

ரிசாலின் அருகே இரண்டு ஸ்பானியச்சிப்பாய்கள் துப்பாக்கிகளோடு நின்றிருந்தனர். ஒளிவீசும் கண்களோடும், மலர்ந்த முகத்தோடும் ரிசால் தோற்றமளித்தான்! ‘சுடு!’ என்றான் அதிகாரி. இருவரும் சுட்டார்கள்! இரத்தம்! ரிசால் பிணம் மேடையிலே!

குய்யோமுறையோ என்று கதறினார்கள். குடிகளது கண்கள் குளமாயின! “ஐயோ” என்று அலறினாள் வீரனது இளம் மனைவி! மரம்போல கீழேசாய்ந்தாள்! வைத்திய வண்டியிலே பாகோ மயானத்திற்கு (Paco Cemetery) மாவீரனது பிணம் எடுத்துச் செல்லப் பட்டது!

மங்கிய புரட்சி மறுபடியும்குமுறியெழுந்தது! புரட்சி! எப்பக்கத்திலும் புரட்சி!

ரிசாலினது மனைவி, கண்விழித்துப்பார்த்தாள். தன்னருகே ஒரு பெருத்த கூட்டமிருப்பதைக் கண்டாள்! எழுந்து உட்கார்ந்தாள். கனல் கக்கும் கண்கள்....துடிதுடிக்கும் தோள்கள்........

“ரிசால் எங்கே? என் உயிர் எங்கே?” என்று கண்ணீர் விட்டுக் கதறினாள்.

“அம்மா! மயானத்திற்கு எடுத்துச்சென்று விட்டார்கள்!”

“யாரை? என் கணவரையா? யார்? ஸ்பானியர்களா? நீங்கள் கண்டீர்களா? உங்கள் இருகண்களாலும் கண்டீர்களா? கண்டுமா சும்மா இருக்கிறீர்கள்! வீரர்களல்லவா நீங்கள்!”

“அம்மா! கவலையால் களைத்திருக்கிறீர்கள். சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நாட்டிலே புரட்சி நடந்து கொண்டிருக்கிறது!”

“ஐயோ! கவலையா, களைப்பா, யாருக்கு? எனக்கா ஓய்வு? என் இரத்தம் கொதிக்கிறதே! என்வயிறு எரிகிறதே! என் நெஞ்சம் துடிக்கிறதே! அன்னியரது கைகளாலா, என் நாதனது பிணம் அடக்கம் செய்யப் படவேண்டும்! ஐயோ! எங்கே ஸ்பானியர்? மாவீரன் என் மணாளன் இறந்தான். இந்த மண்ணிலே இனிமாற்றான் ஒரு விநாடியும் இருக்கக்கூடாது. புறப்படுங்கள் வீரர்களே, கையில் கிடைத்ததை எடுத்துக் கொள்ளுங்கள்! துரத்துங்கள் அன்னியரை! என் கணவனைச் சுட்ட கயவரைச் சுடுங்கள்! அவர்கள் வாழுமிடங்களைச் சுட்டுப் பொசுக்குங்கள்!

அதோ! அதோ!! பாருங்கள்! நாலாப்பக்கங்களிலும் பாருங்கள்! வீர ரிசாலினது இன்பமுகம் தெரிவதை! ரிசாலைப் பாருங்கள்! விடுதலைக்காக நம் உயிரையும் தரலாம் வாருங்கள்!” என்று வீரமுழக்கம் செய்தாள்.

ஓடினாள் அன்னியரைத் தேடி. வீரர் பின் தொடர்ந்தனர்! ஆயுத நிலையங்களைக் கைப்பற்றினார்கள். அன்னியரைச் சுட்டார்கள், வெட்டினார்கள், கொன்றார்கள்! பழிக்குப் பழி வாங்கினார்கள்! விரட்டினார்கள் அன்னியரை வெளியே! தன்னாட்சி பெற்றார்கள்!

தூக்குமேடை தூள் தூளாயிற்று! பாகோமயானத்தில் புதைத்த வீரனது சவப் பெட்டியைத் தோண்டியெடுத்தார்கள் வெளியே! தூக்குமேடையிருந்த இடத்திலே புதைத்தார்கள் தூக்கு மரத்திற்குப் பதில் அங்கே கொடிமரம் நின்றது!

மாவீரனது மனைவி, கணவனது கல்லறையைக் கண்டதும் கலங்கி கண்ணீர் விட்டாள்! அருகே வானளாவப் பறந்துகொண்டிருந்த சுதந்தரக்கொடியைக் கண்டதும் மலர்ந்தது அவள் முகம்!

## ஷாரீருக்கு ஆதரவு

காட்டுமிராண்டிப் போக்கிலே, இந்தோனேஷியாவைத் தாக்கும் டச்சு ஏகாதிபத்யத்தைக் கண்டித்து ஜனாப் ஜின்னா பேசியதுடன், பாகிஸ்தான், தன்னாலான உதவியையெல்லாம், இந்தோனேஷியாவுக்குச்செய்யும் என்று வாக்களித்துள்ளார். ஏற்கனவே, ஷாரீருக்கு, பண்டித ஜவஹர் காங்கிரஸ்சார்பிலும், இந்திய யூனியன்சர்க்கார் சார்பிலும் ஆதரவு தந்திருக்கிறார். இந்தோனேஷ்யா, முஸ்லிம்கள் பெருவாரியாக உள்ள நாடு.


“மதி”

(மாத வெளியீடு)

விலை, அணா 4

ஆசிரியர்.

பே. ந. குணச்சந்திரன்

அறிவியல் தொழில்முறை, கதை, இலக்கியம்; மொழி பெயர்ப்பு முதலிய பல பகுதிகளுடன் வெளிவருகிறது.

ஆண்டுச்சந்தா ரூ. 2—12—0

ஏஜண்டுகள் தேவை

மற்ற விவரங்களுக்கு:—

“மதி”
287, தம்புசெட்டித் தெரு,
சென்னை 1.

# இது சகஜம்!

புதிதாக வேலை தேடிக்கொண்டவர்கள், தங்கள், அமுலைக் காட்ட எண்ணுவதும், கொஞ்சம் ஆர்ப்பரிப்பு இருப்பதும் சகஜம். பெரிய அதிகாரம் படைத்தவர்களுக்கு மட்டுமல்ல இந்தச் சுபாவம். எனக்குத் தெரிந்த நண்பரின் மகனுக்கு ஒரு வட்டிக்கடையிலே உத்யோகம் கிடைத்தது. கடைவீதியினர் கந்தசாமி (அந்தவாலிபனின் பெயர் அது) க்குக் காவற்காரன் வேலை கிடைத்தது என்று கூறினர் — அவனோ தனக்கு ஆபிசில் அடெண்டர் உத்யோகம் என்றுதான் கூறினான். இந்த அளவோடுநின்றுவிடவில்லை. தனக்கு அதிகாரம் எவ்வளவு என்பதையும் கூறினான்.

“யாராக இருந்தாலும் சரி—உள்ளே போகவேண்டுமானால், நம்மைத் தாண்டித்தான் போகவேண்டும்—அதுவும் நான் போகச் சொன்னால் தான்!” என்று ஒருநாள் என்னிடம் கூறிவிட்டு, அவன் வேலைக்குப் போன ஒருவார காலத்துக்குள் வாயிற்படியிலே யார்யாரை நிறுத்தினான் என்பதன் அட்டவணையை சரமாரியாகச் சொன்னான். இரண்டொரு பி. ஏ. க்கள், ஒரு இலட்சாதிகாரி, ஒரு கவுன்சிலர், இப்படி இருந்தது அந்த அட்டவணை. அவன் மட்டு மரியாதை அறியாதவனல்ல—நாலு பேருடன் பழகாதவனுமல்ல—ஆனால் அந்த ‘வேலை’ யின் மகத்துவம் அவனுக்குப் புதிய சுபாவத்தையே கொடுத்துவிட்டது. இது சகஜம்.

ஊரிலே சந்தை, அல்லது திருவிழாச் சமயம், இப்படிப்பட்ட நேரத்திலே, வண்டிக் காரர்களைப் பாருங்கள், எவ்வளவு அதிகார சுபாவம் பிறக்கிறது! சகஜந்தானே அது! அதிலும் சாமான்யர்களுக்கு, இந்தச் சுபாவம், நோய்போல வளர்ந்துகொண்டே போகும். தெளிவுள்ளவர்கள் மட்டுமே இந்த மயக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்வர். பட்டமேறும் மன்னன், நான் குறிப்பிட்ட பாங்கிப்யூன்போல, ஆர்ப்பாட்டம் காட்டமாட்டான்—தன்சுபாவம் எவ்வளவுக் கெவ்வளவு சமூகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு தான், தன் அதிகாரமும் அந்தஸ்தும் இருக்கும் என்ற அறிவு, அரசனுக்குத் தெரியும்—சிலருக்குத் தவிர. அவர்களிலேயும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அரசு செலுத்துபவன் முதற்கொண்டு அங்கத்தை வளர்க்க ஏதோ ஒருவேலை அகப்பட்டால் போதும் என்ற அளவிலே உள்ளவர்கள் ஈறாகக் கொண்டுள்ள சுபாவம், நகைப்புக்குத்தான் இடமளிக்கக்கூடியது—அதற்குமேல் அதனைக் கவனிக்கவேண்டியது கூட இல்லை—இது சகஜம் என்று விட்டுவிட வேண்டியது தான்!

இப்போது, ஆட்சியாளர்களாக வந்துள்ள காங்கிரஸ்கட்சியினரில்சிலருக்கு, இத்தகைய சுபாவம் வந்திருக்கிறது—தங்களின் புதியநிலைமை, புதிய அதிகாரம் இவைகளைக் காட்டிக் கொள்வதிலே அவர்களுக்கு அமோகமான ஆசை ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவு என்ன? ஆகும் என்பது பற்றி அவர்களுக்குக் கவலையும் கிடையாது. எங்கும் தங்கள் பிரதாபத்தைப்பற்றிய பேச்சு இருக்கவேண்டும், எவரும் தங்கள் அதிகாரத்தைக்கண்டு நடுநடுங்க வேண்டும், யாரும் தங்கள் தயவை நாடவேண்டும், என்று எண்ணுகிறார்கள். அந்த எண்ணத்துக்கு ஏற்றபடி பேசுகிறார்கள், செயலிலும் இறங்குகிறார்கள். கிராமப் புறப்பழமொழி தெரியுமல்லவா, காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் மேய்ந்த மாதிரி என்று, அதுபோல இந்த ஆர்ப்பாட்ட உணர்ச்சி, மட்டமான ரகம். அதுபோலவே மட்டமான ரகத்தார்களே, இதுகண்டு, பயப்படுவர், அசூயைகூடக் கொள்வர், சிலர், அந்தநிலைமை தங்கட்கு வரவில்லையே என்றுகூட ஏங்குவர். விஷயம்தெரிந்தவர்கள்மட்டுமே, இதுசகஜம் என்று கூறுவர்.

ஆட்சிப்பீடம் ஏறுவது என்பது, எந்தக்கட்சியின் உண்மையான வாழ்வுக்கும், தொடக்கமே தவிர, முடிவு அல்ல. பொறுப்பேற்கும் காலம்—சருக்குமரம் போன்றது அதிகாரம்! பல நாட்கள் பட்ட கஷ்டம் தீர்ந்தது என்ற மகிழ்ச்சி, ஆட்சிக்கு வந்ததும் ஏற்படும்—சகஜம்—ஆனால், அதிகாரம் கிடைத்ததும், இனிநாம் ஆரம்பிக்க வேண்டியது தான் நமது ஆர்ப்பரிப்பை—யார் கேட்கமுடியும்—நமக்குள்ள பலத்தைக் காட்டியாக வேண்டும் என்று எண்ணுவது ஆபத்துக்கு அச்சாரம் தரும் அசட்டுத்தனம். முடிமன்னர்கள் பலர், இத்தகைய அசட்டுத்தனத்தால் அழிந்தனர். படைத்தலைவர்கள் கெட்டனர். சாமான்யர்கள் தப்புவரா? ஆனால் இது தெரிகிறதா அவர்களுக்கு; தெரிவதில்லை.

காங்கிரஸ் கட்சியினர், நாட்டுவிடுதலைப் போர் நடத்தி, மக்களின் மட்டற்ற நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவர்கள், அவர்களின் திட்டங்களிலே காணப்படும் முரண்பாடுகள் சொல் மாற்றங்கள் முதலிய பல குறைகள், மக்களின் கண்களுக்குத் தெரியாமலிருப்பதற்குக் காரணம், அவர்கள் அன்னிய ஆட்சியை நீக்கும் அறப்போரில் ஈடுபட்டவர்கள் என்பதுதான். வாள் வளைந்திருந்தாலும், எதிரியின் மார்பிலே பாய்கிறதல்லவா—அது போதும்—என்பதுதான்.... சமயலறைக் கொழியில் கூறுவதானால், ஓட்டைச்சட்டியானாலென்ன, கொழுக்கட்டை வெந்தால் போதும்” என்பார்களே, அது போல.

மக்கள் தந்துவந்த, இன்றும் அளிக்கும் ஆதரவின் தன்மை இவ்விதமானது தான் என்பதைப் புரிந்துகொண்டால், காங்கிரசிலே, சிலருக்கு, நான் மேலே குறிப்பிட்ட சுபாவம் ஏற்படாது. அவர்கட்குப் பாபம்தங்கட்குஏற்பட்டமதிப்புக்குக் காரணம், தாங்கள் எடுத்துக்கொண்ட காரியத்தின் மேன்மையால் என்பது தெரியாமல் தங்களாலேயே தங்கட்குக் கிடைத்துவிட்டது, என்ற தவறான எண்ணம் ஏற்பட்டு விட்டது. காங்கிரசிலே மட்டுமல்லாமல், சர்வதேச அரசியல் அரங்கிலேயே அதி உன்னத இடம் கொண்டுள்ள பண்டித ஜவஹர், சென்றதிங்கள், வானொலியில்பேசும் போது, “நாமெல்லாம் பெரிய காரியத்தில் ஈடுபட்டுள்ள சிறிய மனிதர்கள்” என்று பண்பாட்டுடன் பேசினார். காங்கிரசிலே உள்ளவர்கள், இந்த வாக்கியத்தை, நித்தம் பத்து முறை படிக்கவேண்டும். ஏனெனில், அந்த வாசகத்திலே பொதிந்துள்ள உண்மையை உணர்ந்து நடந்து

கொண்டால் தான், காங்கிரஸ்காரர்களின் செல்வாக்கு நிலைக்கும். இல்லையேல், 'அன்றோர்நாள்' என்று அகவல் பாட வேண்டியதுதான். உலகிலே ரணகளச் சூரர்களெல்லாம், பாடி இருக்கிறார்கள் அந்த அகவலை.

"தங்கள் வீணை, ஆஹா!—அந்த நாதம், அற்புதம்—" என்று புகழ்கிறார் ஒரு கலாரசிகர், வீணை வாசித்த வித்வானை—வழியில் கண்டு.

வித்வானுக்கு, சங்கீதத் திறமையுடன், சாதாரண விவேகமுமிருந்தால் என்ன சொல்வார்.

"இது என்ன பிரமாதம்! என் குருநாதரின் வித்தையிலே பதினாயிரத்தில் ஒரு பகுதிகூட அடியேனுக்கு இல்லை. தங்கள் ஆசீர்வாதத்தால் நான் மேலும் மேலும் முன்னேற வேண்டும்" என்றல்லவா கூறுவார்.

"ஆமய்யா ஆம்! இவ்வளவு அருமையாக வீணை வாசிக்கிறேன்—வித்வத்சிரோமணி என்று விருது கொடுத்தனர் இந்த ஊரார்—இப்படிப்பட்ட எனக்கு, உன்மகளைத்தர—கலியாணம் செய்துதர என்ன தடை" என்று கேட்டால்—வித்வானின் கதி என்ன!

அதிகாரம்கிடைத்ததும், அதற்கு முன்பு இல்லாத அடக்கமும் அக்கரையும், அன்பும், ஏற்பட வேண்டும். வீரன் மட்டுமல்ல, அவன் விவேகி, அஞ்சாநெஞ்சினன் மட்டுமல்ல, அன்பு சுரக்கும் மனதினன் என்று சொந்தக் கட்சியினர் மட்டுமல்ல, எதிர்க் கட்சியினரும் கூறவேண்டும் விதத்திலே, நடந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் இன்று கிடைத்துள்ள செல்வாக்கு கருகாமலிருக்கும். இதை அடிக்கடி வலியுறுத்திக் கூறி வருகிறார் காந்தியார். ஆனால், பலனோ பூஜ்யமாகிறது. நாளாகவாக, ஆட்சியாளர்களாகிவிட்ட, காங்கிரஸ் நண்பர்களின் போக்கும் திட்டமும், "ஈடு எனக்கில்லையே! இருந்தால் நீ சொல் ஐயே!" என்று உரத்த குரலில் பாடும் தெருக்கூத்து ராஜாவின் நிலைக்குப் போகிறது.

நாட்டுவிடுதலைப் போர் முயற்சியின் போதாவது, இந்தச்சுபாவத்தை சகித்துக் கொள்வர்—பெரிய காரியத்தில் ஈடுபட்டுள்ளனர், சுபாவம் கொஞ்சம் அகம்பாவமாகக் காணப்படுகிறது, இருக்கட்டும், பரவாயில்லை என்றுகூட எண்ணிக் கொள்வர். ஆனால், போர் முடிந்து, இலட்சியம் பூர்த்தியானதாக அறிவிக்கப்பட்டான பிறகு, இந்த அமுல் நீடித்து, சுபாவம் மோசமாகிக் கொண்டு போனால், மக்கள் சகித்துக்கொள்வரா—யாருக்கும் இல்லை, அத்தகைய தடித்த தோல்! ஹிட்லர் இருக்கும் வரையிலே சர்ச்சிலுக்கு மதிப்பு—அவருடைய எதேச்சாதிகார சுபாவம், முதலாளித்வ மனப்போக்கு, யாரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் முறை, இவ்வளவையும் பிரிட்டிஷ் மக்கள் சகித்துக் கொண்டனர். சர்ச்சிலை ஆதரித்தனர் — எதற்கு?—ஹிட்லர் மீது ஏற்பட்ட கோபத்தால். ஹிட்லரின் தோல்விக்குப் பிறகு? சர்ச்சில அதே சர்ச்சிலதான்! ஆனால் மக்கள், அவருடைய போக்கைக் கண்டிக்க, அவரையும் அவருடைய சகாக்களையும் அதிகாரத்திலிருந்து விரட்ட முனைந்தனர். முன்னாள் வீரனல்லவா? ஆமாம்! உன்வேலை முடிந்தது—எமது மகிழ்ச்சி, வந்தனம்—ஆனால் இந்நாள், உன் சுபாவத்தை நாங்கள் சகிக்க முடியாது—வேலை வேறு இருக்கிறது, அதற்கு உன் சுபாவம் தடையாக இருக்கிறது, ஆகவே விலகு என்று கூறிவிட்டனர். சர்ச்சிலுக்கு இது, கதி. சகஜானந்தர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சிக்கு இன்றுள்ள அதிகார பலம், மக்களின் ஆதரவு பல இரண்டும் பெற, பல ஆண்டுகள் பலவேறு வகையான பணி புரிய வேண்டி இருந்தது—ஆனால் ஆண்டுகள் பல அல்ல—இரு ஆண்டுகளிலே, எதிர்க் கட்சியாரின் கடுமையான தாக்குதலால் அல்ல—அந்த எதிர்க் கட்சியினரை அவர்கள் தாக்குவதன் மூலம் — இன்று பெற்றுள்ள செல்வாக்கைச் சிதறடித்துக் கொள்ளப் போகிறார்கள். கொம்பரையில் தேன் — விளிம்பு வரை! ஆனால் அடிப்புறத்திலே ஒரு சிறு துவாரம்!—என்ன ஆகும்? ஓய்யார ஓடம்! அதிலே உல்லாச வாழ்வினர்! அவர்களின் உள்ளமோ, களிப்பு மது உண்ட நிலை. பாய் மரத்திலே, பழுது!—நிலைமை என்ன ஆகும்? அதுபோலவேதான், இன்றையக் காங்கிரஸ் கட்சிக்கு, அதிகாரம், அமோக ஆதரவு, ஆனால் அவர்களின் சுபாவம், பழுதுபட்ட பாய் மரம் கொண்ட ஓடத்துக்குச் சமமாகி வருகிறது.

எதற்கெடுத்தாலும், எந்தக் காங்கிரஸ் தலைவரானாலும், ஏதோ தலைமுறை தலைமுறையாக அதிகாரம் செய்தவர்கள் போலவும், "கார் உள்ளளவும், பார் உள்ளளவும், பஞ்சபூதம் உள்ளளவும் இந்தா விபீஷணா! இலங்காபுரி ராஜ்யம்" என்று இராமன் பாடிக் கொடுத்தாராமே அண்ணனைக் கொன்று தம்பிக்குப் பட்டத்தை, அதுபோல, சாஸ்வதமாக ஆட்சி தங்களிடமே இருக்கும் என்ற நினைப்புக் கொண்டவர்போலவும், ஒரே கபர்தார் கூச்சலிடுகின்றனர். இது, துவக்கத்தின்போது, வீரரையும் அஞ்சவைக்கும், ஆனால், நிச்சயமாக, கொஞ்ச நாட்களில், கோழையையும் வீரனாக்கி விடுமே! "இவ்வளவுதானா ஐயா! உங்கள் விஷயம் புரிந்துவிட்டதே?" என்று எவரையும் பேசவைக்கும். பிறகு?—அதுதான் சரிதம் கூறும் பாடம்.

ஆளவந்தவர்கள், பலர். ஆளத் தெரியாமல் ஓடினவர்கள் பலர். ஆளும் முறை, அடக்குவதுதான் என்ற அசட்டுத் தைரியம் கொண்டவர்கள் சிலர். அவர்கள் விரட்டப்பட்டனர். இது வரலாறு கூறும் பாடம். காங்கிரசிலே இருக்கும் சகஜானந்தர்கள், ஓய்வுநேரத்தில் படிக்கவேண்டிய பாடம்.

எவ்வளவு நியாயமான கோரிக்கையாக இருந்தாலும், நெரித்த புருவத்துடன், இருந்துகொண்டு, கவனிக்க முடியாது! என்று கூறுவது.

எவ்வளவு பணிவுடன், குறையைக் கூறிக் கொள்பவரிடமும், ஆள்காட்டி விரலை அதிகாரக் கோலாக்கி, அகம்பாவத்துடன் நடந்துகொள்வது.

எளியோரை ஏளனம் செய்வது—வலியோரை வணங்கவைப்பது.

இது சரியா? இது முறையா? என்ற கேள்விகளைக்கூட, எதிர்த்தா பேசுகிறாய்? என்னிடமா கேள்வி? —நான் யார் தெரியுமா? என்ற அதிகார மொழி பேசி அடக்கப் பார்ப்பது.

எதற்கும் தடை விதிப்பது—புதிய புதிய கட்டளைகள் பிறப்பிப்பது.

ஆளவந்தார்கள், அழிவுப் பாதையிலே புகும்போது, நான் மேலே குறிப்பிட்ட முறையைத்தான் கொள்வர்.

ந்து காங்கிரஸ் சகஜானந்தர்கள், "மூன்று மூன்று இலை வருவதற்குள்" இந்த முறையைக் கையாளுகிறார்கள். குன்றுபோல் அன்னம் குவித்திருந்தாலும், நீண்ட நாள் பசியோடு இருந்தவனும் வேண்டுமளவு மட்டும் உண்ணலாமே ஒழிய, குன்றைக் கரைத்திடுவேன் என்ற முறையிலேயா தின்பான். பல ஆண்டுகள், பாடுபட்டு, பல கஷ்டப்பட்டுப் பெற்ற அதிகாரம் தான்! அதற்காக? கிடைத்த அதிகாரத்தை, யார் மீதாவது என்ன காரணத்தைக் கூறிக்கொண்டாவது, பிரயோகித்துக்கொண்டே இருக்க வேண்டியதுதானா? இந்த ஆர்ப்பாட்டம் எவ்வளவோ சிரமப்பட்டுச் சேகரித்த செல்வாக்கை, எவ்வளவு விரைவிலே சரியவைக்கப் போகிறது என்பதை, அவர்கள் உணரத்தான் போகிறார்கள். எவ்வளவுக் கெவ்வளவு மும்முரமாகவும், முன்பின் யோசியாமலும், எதிர்க் கட்சிகளை அவர்கள் பல்வேறு வழியாலும் ஒடுக்குகிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு விரைவிலே, ஆளவந்தார்களின் அதிகாரநிலை மாளப்போவது உறுதி. மக்கள் மரக்கட்டைகளல்ல! பக்தி மேலிட்டுள்ளவர்கள்கூட, தங்கள் குறையைத் தீர்க்கவில்லையே கடவுள் என்ற நேரத்தில், 'உன் கோயிலிலே இடி விழ' என்று கூறுவது கேட்கிறோம்—அரசியல்கொலு மண்டபத்துக் கோலாகலர்கள், என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் என்று மக்கள், கடைசிவரை விட்டுவைப்பார்கள், என்று எண்ணுவது, ஏமாளித்தனம்.

ஆசிரியர்களா? டிஸ்மிஸ்!!
தொழிலாளரா? துப்பாக்கி!
உழவரா? தடை உத்தரவு!
வியாபாரியா? லைசென்ஸ்,
காான்சல்.
மாணவரா? டிஸ்மிஸ்!

இப்படிக்கு, எந்தத் திக்கு திரும்பினும் பிடி சாபம்! பிடி சாபம்! என்ற முறையிலே, ஆளவந்தார்கள் வந்துவிட்டனர். இந்த இலட்சணத்திலே; அரிசியோ ஆறு அவுன்சு! பருப்பு வகையோ, கிடையாது! கிடைக்கும் பீன்சு தின்றாலோ, உயிருக்கே கேடு! ஆடையோ, காந்திய முறைக்கு மட்டுமே கூடப் போதாத நிலை!

மக்களின் கஷ்டம் பெருகுகிறது—தொழிலாளர் துயர் வளருகிறது—சிறைக்கூடமோ நிறைகிறது—ஆளவந்தார்களின் பேச்சோ, ஜார் இருந்தால், அந்தத் திறமையை இரவல் கேட்பான், அவ்விதமாகி விட்டது.

இது நல்லதல்ல! இது சகஜமாக, சாமான்யர்களுக்கு, சில்லறைகளுக்கு, பட்டரகங்களுக்கு, நான் முதலில் குறிப்பிட்டேனே அடெண்டர் கந்தசாமி, அப்படிப்பட்டவர்களுக்கு ஏற்படலாம். அவர்களின் வாழ்வும், வீழ்ச்சியும், பலரைப் பாதிக்கக்கூடிய நிகழ்ச்சி அல்ல. ஆனால், நாட்டின் பெரிய கட்சியினர், மூத்த பிள்ளைகள், முடி தரித்துக் கொண்டவர்கள், இந்தச் சுபாவம் கொள்வது, கேடுதரக் கூடியது, அவர்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்குங்கூட. எனவேதான், அதிகார போதை தரும் மயக்கத்தை, மதியின் துணைகொண்டு, வாழ்ந்து வீழ்ந்தவர்களின் வரலாறுகளைப் படித்துப் பாடம் பெற்று, மயக்கத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறோம்—உண்மையாகவே நல்லெண்ணத்துடன் கூறுகிறோம்.

பார்த்துக்கொண்டே இருக்கும் போது, கத்தான மாறுதல்கள் ஏற்படும் காலம் இது. மனதிற்கு எட்டாத பல புதுமைகள், மிகச் சாதாரண சம்பவங்களாகிவிட்ட நாட்கள். நாடு, இனி, காட்டு ராஜா முறையை ஏற்காது. எவ்வளவு அதிகாரம் கிடைத்தாலும், அதற்கும் எல்லை உண்டு! ஆளவந்தார்களின் சுபாவம் கெட்டுக் கெட, எல்லை, சுருங்கும். சுருங்குவது, துரிதமாகிறது, சகஜானந்தர்களின் போக்கினால்.

அடுத்துக் கூட இருக்கும் சட்ட சபையிலே, சகஜானந்தா, ஒரு காரியம் செய்யப் போகிறாராம்.

உழவர் — மிராசுதாரர் தகராறு தீர்க்கும் காரியமா? அல்ல? அவ்வளவு பெரியவர், இவ்வளவு சிறிய காரியத்தையா செய்வார்? செச்சே! ஆலைத்தொழிலாளருக்குற்ற குறை களையப் போகிறாரா? அதுவு மல்! அதற்கு ஆசாமிகளா இல்லை ஏ! அப்பா! எவ்வளவு போலீஸ், ராணுவம், சட்டங்கள்—புதிய சட்டம் இயற்ற சட்ட மந்திரிகள்!! சிறைக் கூடங்கள்! வீட்டுக்குள் இரு, நாட்டைவிட்டு நட! கூட்டுக்குள் வா! என்பன போன்ற உத்தரவுகள்!! இவ்வளவு இருக்கும் போது சகஜானந்தர், தொழிலாளர் துயர் துடைக்கும் வேலையிலே ஈடுபடுவாரா? அவருக்கு, வேறு அலுவல்! அவராகத் தேர்ந்து எடுத்துக் கொண்ட அலுவல்.

நாட்டு வளம் பெருகத் திட்டமா? அல்ல! அந்தக் காரியத்தைத் தான் சேட்மார்களிடம் 'குத்தகைக்கு' விட்டாயிற்றே.

இவ்வித 'இகலோக' க் காரியம் அல்ல!

பரலோகத்துக்கான காரியம்!!

கேவலம், சரீராதி உபாதைகளைக் களைந்து, வறுமை, பிணி, வேலையில்லாக் கொடுமை, போதாமை, முதலிய இத்தகையவைகளைப் போக்கும் சிறு செயலையா, பெரியவர் புரிய முன் வருவார்?

அவர் தமக்கென எடுத்துக்கொண்டுள்ள அலுவல், இந்த லோகத்திலே உள்ளவர்களின் விருப்பத்தின் படியோ, அவர்களின் அக்கரைக்காகவோ, அல்ல. இந்த லோக காரியம் என்ன அவ்வளவு முக்யத்துவம் வாய்ந்ததா? மாயாலோகத்தைப் பற்றிய, கவலை, மகான்களுக்கு ஏற்படுமா?

அவர் தமக்கென வகுத்துக் கொண்டுள்ள வேலை, தபோதனர்கள், ரிஷி சிரேஷ்டர்கள், ஜீவன் முக்தர்கள், ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் ஆகியோர், செய்து, மிச்சமாக வைத்துவிட்டுப் போயிருக்கும், 'மதாச்சார, சதாச்சார' காரியமாகும். எவ்வளவு பெரிய தர்க்க நிபுணனாக இருக்கட்டும், எவ்வளவு பெரிய ஆராய்ச்சியாளனாக இருக்கட்டும், வல்லவனாக இருக்கட்டும், அப்படிப்பட்டவனை எல்லாம் நான் வாதிலே வெல்வேன்—உண்மையை நான் நிலை நாட்டுவேன், என்று, அறை கூவிப் பணியாற்றும் செயலாக, ஆண்மையாளரின் செயலாக வாவது, அமைத்துக்கொண்டாரா? அதுதான் இல்லை! தடை நடுமி வேலை—இதற்குத் தலைத்தனத்தை நடத்தும் வாய்ப்புத் தன் கட்சிக்குக் கிடைத்துவிட்டது என்ற காரணத்தால், அகடபாவத் திட்டம்.

பொது இடங்களிலும், பள்ளிக் கூடங்களிலும் மதங்களைக் கண்டித்து யாரும் பேசக்கூடாது என்று தடை விதிக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை, சகஜானந்தர், சட்ட சபையிலே கொண்டு வருவதாக இருக்கிறாராம்.

இந்த அபூர்வ கைங்கரியத்தை இவர் செய்ய முன் வந்தது கேட்டு,

2-ம் பக்கம் பார்க்க)

## கண்டதுண்டோ?

—0—

புது டில்லியிலே பாருங்கள், யாரோ ஒரு மகாபாபி இருக்கிறான். மகாத்மாவை, மிகச் சிக்கலான கேள்வி கேட்டிருக்கிறான் இந்த ஆசாமி. ஆகவேதான் அந்த ஆளை மகா பாபி என்று கூறினேன்—அதாவது அவ்விதம் அந்த ஆசாமியைக் கூறுவர் காந்தியர்கள்.

நாள்தோறும் மகாத்மா பஜனை நடத்துகிறாரல்லவா அந்த கண்ட ஆசாமிக்கு, ஒரு சந்தேகம் — இயற்கையாக யாருக்கும் எழக்கூடிய சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

அஹிம்சை பேசுகிறார், சத்ய சோதனையில் ஈடுபட்டிருக்கிறார், துறவுக் கோலத்திலே இருக்கிறார், நாள்தோறும் ராமநாமத்தைப் பஜிக்கிறார், இலட்சக்கணக்கான மக்களால் மகாத்மாவென்று கொண்டாடப் படுகிறார், இப்படிப்பட்டவர் இது வரையிலுமா கடவுளைக் காணாமல் இருந்திருப்பார், அதிலும் அடிக்கடி அந்தராத்மா சொற்படி நடப்பதாகவும் கூறிக்கொள்கிறாரே, அப்படிப்பட்டவர், நிச்சயம், கடவுளைக் கண்டுதான் இருப்பார், என்று எண்ணிக்கொண்டு, அவரையே கேட்டு விடுவது என்று தீர்மானித்தான். புது டில்லியில் ஜூலை 23ந் தேதிய பஜனைக் கூட்டத்தில், சீட்டு எழுதிக் கொடுத்தான் மகாத்மாவுக்கு, "பாபுஜீ!கடவுளை நீங்கள் கண்ணால் கண்டீர்களா?" என்று.

மகாத்மாக்கள், இப்படிப்பட்ட கேள்விகளும் வரக்கூடும் என்று எப்படி எதிர்பார்ப்பார்கள்—அதிலும் வடநாட்டிலே! தென்னாடு என்றாலாவது, யாராவது சு. ம. கேள்வி கேட்கக் கூடும்!! வடநாடு, பூஜாமடம், பக்த கோடிகள் நிறம்பிய இடமல்லவா.? அங்கு இவ்விதமான கேள்வி பிறந்தால், காந்தியாருக்குத் தூக்கிவாரித்தானே போட்டிருக்கும். என்ன செய்வார் பாபம்! நான் கடவுளைக் கண்ணால் கண்டது இல்லை. என்று கூறிவிட்டார். கூறினதோடு இல்லை, வழக்கமாக இந்த நாட்டு சித்தர்களும் அவர்கள் போல் நடிக்கும் எத்தர்களும், பண்டிதரும் பாமரரும், கூறுவார்களே அதே உபதேசத்தைத் தான் அவரும் கூறினார். என்ன உபதேசம்? கோபத்தை அடக்கி, சத்யத்தின் வழிப்படி நடந்தால், கடவுளைக் காணலாம் என்றார். இது பழய பாடம். எனவே இதனை அவர் கூறுவதிலே, பெருமையுமில்லை, பயனுமில்லை. நமக்கு ஆச்சரியம், இதிலே எழவில்லை. இவ்வளவு காலம் அஹிம்சை, சத்தியத்திலே ஈடுபட்டும், கடவுளைக் காணும் பரிபக்குவம் அவருக்கு வரவில்லை என்று அவரே கூறுகிறாரே, அவ்விதமான நிலையிலே உள்ளவர்தானே இவர், அவ்விதமிருக்க இவரை மகாத்மாவாக்குவானேன், என்று எண்ணித்தான் ஆச்சரியமடைகிறோம். தமிழருக்கு நெடுநாட்களாகத் தெரிந்த ஒரு மொழி உண்டு, கண்டவர் விண்டிலர்—விண்டவர் கண்டிலர்! எனவேதான் தமிழரிடம், வேடம் போட்டுச் சுலபத்திலே ஏமாற்ற முடிவதில்லை. வடநாட்டுக் கலாச்சாரம் இங்கு புகுவதற்கு முன்பு வரையில் அத்தகைய மனப்பண்பு இருந்தது. பிறகோ? எடுப்பார் கைப்பிள்ளைகளாயினர்!!

✽

## களம் புகுமுன்?

ஆந்திரமாகாணம் அமைக்கப்பட வேண்டியது அவசியந்தானென்று, அரசியல் நிர்ணய சபையினர் தீர்மானித்துவிட்டனர் என்றும், காந்தியாரும் இதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளாராகவும், எல்லை நிர்ணய கமிஷன் அமைக்கப்பட்டு, எல்லை, அதனால் நிர்ணயிக்கப்படும் என்றும், மந்திரி காலா வெங்கட்ராவ் கூறுகிறார். தமிழகத்தின் எல்லையை இலக்கியம் காட்டுகிறது, சங்கம் சாற்றுகிறது, என்று கூறுவதும், இரத்தம் சிந்தியாவது எல்லையைக் காப்போம் என்று பேசுவதும், மேடைக்குப் போதும். ஆனால் தலைவர்கள், அந்த முறையிலே திருப்தி அடைந்துவிடாமல், உடனடியாக, எல்லைக் கமிஷனின் முன்பு, காட்டவேண்டிய ஆதாரங்களைத்தயாரிக்க ஒரு கமிட்டி அமைத்துவேலை செய்வது மிகமுக்கியம். வெள்ளையர் ஆட்சியின் விளைவாக ஏற்பட்டுவிட்ட பலவிதமான சிக்கல்களிலே, இந்த எல்லைத் தொல்லையும் ஒன்று. சென்னை, சந்திரகிரி ராஜாவுடையது என்று சிறுபிள்ளைத்தனமாகப் பேசும் ஆந்திரத்தலைவர்களுக்கு, வடவேங்கட முதல் தென்குமரிவரை தமிழகம் என்ற புலமை நடையைமட்டுமே பதிலாக அளித்துக்கொண்டிராமல், தக்க ஆதாரங்களைக்காட்டும்படி ஆந்திரரை வற்புறுத்தவும், இருப்பதை எடுத்துக் காட்டவும், உடனடியாக மேடையை விட்டு இறங்கி, ஓர் இடத்தில் உட்கார்ந்து யோசித்து திட்டம் தீட்ட வேண்டும். இதற்கான காரியத்தைக் கவனியாமல் இருந்துவிட்டு, பிறகு, களம் புகுவோம் என்று பேசுவது பயன் தராது.

எல்லைப் பிரச்னை இப்போது இங்கு, முக்கியமானதாகி விட்டது. சிலோன், வங்க, ஆகிய பெருநிலங்களில் துண்டிடுப்புடன் ட்டுக்கூட, எல்லை அமைப்பது முடிந்துவிடவில்லை—சரியான தீர்மானமான எல்லைக்கோடு அமைப்பதற்காக, கமிஷன் வேலை செய்கிறது. இங்கும் அந்த முறையைத்தான்கையாள்வார்கள். எனவே தமிழகத்தின் உருவம் சிதையாமலிருக்கவேண்டும் என்பதிலே அக்கரை கொண்டவர்கள் அனைவரும், அவரவர்களுக்கு உள்ள சில பிரத்யேக பிரச்னைகளையும், திட்டங்களையும் பாதிக்காத வகையில், இந்த எல்லை அமைப்புக்காக ஒன்றுகூடி வேலை செய்யவேண்டும். இதுபோலவே, தமிழகத்திலுள்ள சகல கட்சியினரும், சேர்ந்து, திருவாங்கூர் சமஸ்தானத்திலே, பிணைக்கப்பட்டுள்ள தமிழநிலத்தை, தனி அரசு உரிமை பெறப்போகும் சமயத்திலே, திருவாங்கூரிலிருந்து பிரித்து, தமிழகத்துடன் சேர்த்துவிடவேண்டும் என்ற இறுதி அறிக்கையைத் தயாரித்து அனுப்பவேண்டும்.

—

## புதிய கொடி.

—

மிச்ச இந்தியாவுக்கு, மூவர்ணக்கொடியில் சில மாறுதலோடு புதிய கொடி தயாரித்ததுபோலவே, பாகிஸ்தானுக்கும் புதுக்கொடி தயாராகிறது. இதுவும் மூவர்ணம்தான்—கொஞ்சம் மாறுதல், மேலே சிகப்பு, இடையில் பச்சை, கீழே வெள்ளை. சக்கரம் இருக்கிறதல்லவா இந்தியக் கொடிக்கு, அதற்குப் பதில் இதிலே பிறை இருக்கும், கொடி நடுவில். கீழே, நீதியின் சின்னமாக தராசும் இருக்கும் என்று கூறப்படுகிறது.

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeevaram.

Dear Sir, I have send the rupees seven only as a [illegible] of your company "Dravida Nadu". Please send paper quickly to my address as soon. and admit me as a ... of your company.